REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK
2023 நவம்பர் 8 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්
வரு. 91 இல. 265 | Wednesday 08, November, 2023 | 20 பக்கங்கள் | 50/-

## தபால் அலுவலகங்கள் வழமைபோல் இயங்கும்



நாடு முழுவதிலும் தபால் நிலையங்கள் நாளை வழமை போல் இயங்குமென தபால் மாஅதிபர் எஸ்.ஆர். டபிள்யூ. எம்.ஆர்.பி.சத்குமார தெரிவித்தார்.

தபால் திணைக்கள தொழிற்சங்கம் நேற்று (07) நள்ளிரவு 12 மணி முதல் நாளை (09) 06

## அரச ஊழியர்களைப் போன்று தனியாரையும் பலப்படுத்துவதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு



நாட்டிலுள்ள 16 இலட்சம் அரச துறை ஊழியர்களையும் 80 இலட்சம் தனியார் துறை ஊழியர்களையும் பலப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்தின் வெற்றியின் ஊடாக எதிர்காலத்தில் மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருளின் விலைகளை குறைத்து, மக்களுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியுமாகையால், இந்த வேலைத் 06

## புதிய முதலீடு, ஏற்றுமதி ஊக்குவிப்புக்கு புதிய பொருளாதார ஆணைக்குழு

### ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்




நாட்டில் புதிய முதலீடுகள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தவும் அதன் கீழ், இலங்கை பொருளாதார ஆணைக்குழு மற்றும் அதுசார்ந்த அலகுகளை நிறுவன ரீதியாக தாபிப்பதற்குமான படிமுறைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. முதலீடு மற்றும் ஏற்றுமதி 06

### 2024 ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படவுள்ள

## நுண்கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மத்திய வங்கியின் நேரடி கண்காணிப்பின் கீழ்



உத்தேச நுண்கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதனை தொடர்ந்து சகல நுண்கடன் நிதி நிறுவனங்களும் மத்திய வங்கியினால் நேரடியாக கண்காணிக்கப்படுமென, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக 30 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நேற்று முன்தினம் (06) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நுண்கடன் நிதி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றன. 06

### விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட

# வர்த்தமானிக்கு தடை விதித்த நீதிமன்றம்

### இடைக்கால கிரிக்கெட் சபையின் செயற்பாடுகளை முடக்கி தீர்ப்பு



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவை இடைநிறுத்தி புதிய இடைக்கால நிர்வாக குழுவை நியமித்து விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட விசேட வர்த்தமானியின் செயற்பாட்டை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (07) இடைநிறுத்தி இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த இடைக்காலக் குழு உறுப்பினர்கள் அந்தப் பதவிகளில் பணியாற்றுவதைத் தடுத்து இடைக்கால உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளின் விவகாரங்களில் தலையிடுவது, அழுத்தம் கொடுப்பதற்கும் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. இதன்பிரகாரம் இந்த இடைக்கால குழு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள், கிரிக்கெட் சபையின் விவகாரங்களில் தலையிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நீதிமன்றம் பிறப்பித்துள்ள இந்த இடைக்கால தடையுத்தரவு பதினான்கு நாட்களுக்கு அமுலில் இருக்கும். அத்துடன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவை தடை செய்தல் மற்றும் புதிய இடைக்கால குழுவொன்றை நியமித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலான விளக்கங்களை தெரிவிப்பதற்காக, இம்மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் பதிவு இடைநிறுத்தம் மற்றும் புதிய இடைக்கால நிர்வாக சபையை நியமித்தமைக்கு எதிராக அதன் முன்னாள் தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த மனுவை, விசாரணை செய்ய தீர்மானித்துள்ளதாலேயே மேன்முறையீட்டு 06

### இணையத்தள பாதுகாப்பு சட்டமூலம்

# தனிப் பெரும்பான்மையுடன் சபையில் நிறைவேற்றலாம்

### உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**சட்டமூலத்தின் சில சரத்துகள் பாராளுமன்றத்தின் தனிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் நீதிமன்று அறிவிப்பு**



இணையத்தள பாதுகாப்பு சட்டமூலத்தை 31 பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு பாராளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியுமென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (07) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிகழ்நிலை பாதுகாப்பு தொடர்பான சட்டமூலத்தின் சில சரத்துக்கள் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 121(1) சரத்தின் பிரகாரம் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட இந்த சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நேற்று (07) பாராளுமன்றத்தில் தெரிவிக்கும் போதே பிரதி சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மேலும் கருத்து வெளியிடுகையில், சட்டமூலத்தின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பின்வருமாறு 3, 5, 7, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 36, 37, 42, 45, 53 மற்றும் 56 ஆகிய பிரிவுகள் அரசியலமைப்பின் 84 (2) ஆவது பிரிவின்படி பாராளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும். 06

## கச்சத்தீவை இந்தியாவுக்கு வழங்கும் எத்தகைய தீர்மானமும் கிடையாது

### இந்திய படகுகளை ஒரு வினாடியும் அனுமதிக்க முடியாது



கச்சத்தீவை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, இந்திய இழுவைப்படகுகளை இலங்கை கடற்பரப்பில் ஒரு வினாடி கூட 06

## நுவரெலியா தபால் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்ற முடிவு

### ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு பந்துலவும் இணக்கம்



நுவரெலியா தபால் அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் மற்றுமொரு திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி எடுத்த தீர்மானத்துக்கு உடன்படுவதாக போக்குவரத்து. நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர், அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தபால் நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றி, தற்போதுள்ள இடத்தில் வேறு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், அப்பகுதி 06

## உணவு விடுதியிலிருந்து மோடிக்கு கடிதம் எழுதுவதனால் பலனில்லை

### ஆக்கபூர்வமாக சிந்தித்து செயலாற்ற வேண்டும்



தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, இந்தியாவுடனான ஈடுபாட்டை முடுக்கிவிட வேண்டும் என வடக்குகிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ஏ.வரதராஜபெருமாள் கோரிக்கையை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு விருந்தகத்திலிருந்து கொண்டு, பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதுவதால் மட்டும் பலன் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாடு கோவையில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே, அவர் 06

## ஊவாவில் அதிபர் தரம் III க்கு நியமனங்கள்



**ஊவா சுழற்சி நிருபர்**

ஊவா மாகாணத்தில் அதிபர் தரம் III க்கு நியமனம் பெற்றவர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கும் வைபவம், மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில் தலைமையில் ஊவா மாகாண வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வைபவத்தில் அதிதியாக 06

## அமெரிக்க DFC உயரதிகாரி நேதன் இலங்கை விஜயம்

### வங்கி உயரதிகாரிகளையும் சந்திப்பார்



அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி ஸ்கொட் நேதன், இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் இடம்பெறவுள்ள அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் 06

### "பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டமூலம்

## உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெறுமதி சேர் வரி திருத்த சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நிராகரித்துள்ளதாக சபாநாயகருக்கு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவின் தலைமையில் கூடியது. 06

## நேர்முகப் பரீட்சைகள் நடத்தாமல் ஆசிரியர் நியமனங்கள் இல்லை

### வழங்கப்பட்டிருந்தால் அது முற்றிலும் தவறு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நேர்முகப் பரீட்சை நடத்தப்படாமல் எந்த ஒரு ஆசிரிய நியமனத்தையும் கல்வி அமைச்சு ஒருபோதும் வழங்காது. மேல் மாகாணத்தில் அவ்வாறு இடம்பெற்றிருந்தால் அது முற்றிலும் தவறென்றும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுமெனவும் 06

## தவறவிட்ட பணம், பொருட்களை கையளித்த ஆட்டோ சாரதி

### கெக்கிராவயில் மனிதாபிமானம்

முச்சக்கர வண்டி சாரதி ஒருவர், அவற்றை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்.கெக்கிராவ பிரதேசத்தில் இச்சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்தப்பையில்,சுமார் 2,00,000 ரூபா பணம், புதிய ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி, முக்கிய ஆவணங்கள் உள்ளிட்ட பொருட்கள் இருந்துள்ளன.

கெக்கிராவ ஒலுகரத கிராமத்தில் வசிக்கும் 48 வயதுடைய என்.பி பாலித பீரிஸ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே கண்டெடுத்த பையை ஒப்படைத்தவராவார். 06

## 30 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளான லொறி




**தலவாக்கலை குறூப் நிருபர்**

தீபாவளி பண்டிகைக்கு விற்பனை செய்வதற்காக பொருட்களை ஏற்றிச் சென்ற சிறிய ரக லொறியொன்று, 06

## சிறுவர்களின் மயானமாக மாறிவரும் காசா நகரம்

### ஐ.நா. செயலாளர் எச்சரிக்கையுடன் கவலை



சிறுவர்களின் மயானமாக காசா நகர் மாறிவருவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அண்டனியோ குட்டரஸ் மிகக் கவலையுடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது, மனிதாபிமான நெருக்கடியைவிடவும் மனித குலத்தின் நெருக்கடியாகுமென அவர் தெரிவித்துள்ளார். 06

### 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில்

## 04 அரச களஞ்சியசாலைகளிலிருந்து 9,07,550 கிலோ நெல் மூடைகள் மாயம்

### விசாரணை அறிக்கை கையளிப்பு; 05 பேர் பணி இடைநிறுத்தம்

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான நான்கு களஞ்சியசாலைகளில் கையிருப்பிலிருந்த நெல் மூடைகள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் ஐந்து உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொல்கஹவெல, ஆனமடுவ, நிகவெரட்டிய மற்றும் மஹவ ஆகிய நான்கு நெற் களஞ்சியசாலைகளில் 9,07,550 கிலோ நெல் காணாமற் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச்சம்பவங்கள் 2021 06

### போலி விசாவில் மலேஷியா செல்ல முயற்சி

## வெளிநாட்டு பிரஜைகள் மூவர் அதிரடி கைது



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து போலி விசாவை பயன்படுத்தி மலேஷியா செல்ல முயன்ற பங்களாதேஷ் பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய குடிவரவு குடியகல்வு எல்லைப் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் (06) இவர்களை கைது 06

# 42 வது அகவையில் அடிவைத்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - தலைவர் கிழக்கு மாகாண - ஆளுனர் கௌரவ

# செந்தில் தொண்டமான்





அவர்களின் பிறந்தநாள் இலங்கை மற்றும் இந்தியாவில் 30க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 200க்கும் அதிகமான முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், மாற்றுத்திறனாளிகள் இல்லங்களில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டதுடன், பூஜை வழிபாடுகளும் இரத்ததான முகாம்களும், மரம் நடுகை நிகழ்வுகளும் இடம்பெற்றது.



சீனி இறக்குமதிக்கான வரி மாற்றம்

# அமைச்சரவையில் சமர்ப்பிக்கும் முன்னரே தகவல் கசிந்தது எவ்வாறு?

## உண்மையை கண்டறிய விசாரணைகள் வேண்டும்

சீனிக்கான இறக்குமதி வரியில் மாற்றம் செய்யும் தீர்மானம் அமைச்சரவையில் முன்வைக்கப்படுவதற்கு முன்னரே வர்த்தகர்களை சென்றடைந்தது எப்படி என்பது தொடர்பில், கேள்வி எழுப்புவதாகவும், வரி மறுசீரமைப்பு தொடர்பில் சுங்க அதிகாரிகள் அறிந்திருந்ததாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

சீனி இறக்குமதிக்கான வரி அதிகரிப்பை யார் அறிந்திருந்தார்கள். இது தொடர்பாக எவராவது தகவல் கொடுத்தார்களா? என்பது பற்றி அவசியம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். ஊடகவியலாளர்கள் சிலர் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே, அமைச்சர் இந்த விடயங்களை குறிட்டார்.

சீனி இறக்குமதிக்கான வரி அதிகரிப்பு விடயம் அமைச்சரவைக்குக் கூட தெரியாது. சுங்கப்பகுதியினருக்கே இது தெரியும்.இந்த வரி அறிவிப்பு விடயம் மோசடிக்காரர்களுக்கு எவ்வாறு சென்றது என்பது கண்டறியப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

சீனி இறக்குமதி செய்யப்படவிருந்த வேளையில் சீனிக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்படப் போகின்றது என்ற தகவல் வர்த்தகர்களை சென்றவடைவது எவ்வாறு? புகையிலை விலை குறைக்கப்படுவதான தகவலை வர்த்தகர்கள் எவ்வாறு அறிந்துகொள்கின்றனர்? இந்த விலை மாற்றம் அமைச்சரவைக்கு தெரியாது. இதனை சுங்கப்பகுதியினரே அறிவார்கள். அப்படியாயின் இந்த தகவல் எங்கிருந்து வெளியே சென்றது? வரவு செலவுத்திட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்க ஏற்பாடு மேற்கொள்கையில், இதனை அறிந்துகொண்டு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இதேபோன்றுதான், ஏதாவது பொருட்களின் இறக்குமதி வரி அதிகரிக்கப்படுமாயின் அதனை அறிந்துகொண்டு அதன் மூலம் இலாபத்தை பெற சிலர் செயல்படுகின்றனர்.

அரசாங்கத்தின் வரி அதிகரிப்பை பயன்படுத்தி இலாபம் திரட்டி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தும் பாரிய மோசடி கும்பல் செயல்படுகின்றது. வரி அதிகரிப்பின் மூலம் இலாபமடைவோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டி நடவடிக்கைகளை, நாம் மேற்கொள்வோம். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு மேலும் இடமளிக்க நாம் தயாராக இல்லை என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

“சமையில் எரிவாயு, எரிபொருள் ஆகியவற்றின் விலையை அரசாங்கம் அதிகரித்திருப்பதாக, பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்? அப்படியாயின் இந்த அரசாங்கம் யாருடையது” என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதில் அளிக்கையில்,

“சமகால அரசாங்கம் சர்வ கட்சி அரசாங்கம். இந்த அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு உரித்தானது அல்ல. நாட்டு மக்கள் நெருக்கடி நிலைக்கு உள்ளான போதுதான், இந்த அரசாங்கத்தை அனைவரும் ஒன்றிணைந்து அமைத்தனர். இருப்பினும் இன்று சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. மின் கட்டணம் போன்றவையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.இவற்றை எல்லாம் சரி செய்வதற்கு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். நாடு வங்குரோத்து நிலையில் உண்டு. இந்த மறுசீரமைப்பை மேற்கொள்ளாவிட்டால் வங்குரோத்து நிலையே தொடரும்.

பம்பலப்பிட்டி,வெள்ளவத்தை ரயில்வே

## மேம்பாலங்கள் 06 மாதங்களுக்குள் மீளமைத்து ஒப்படைக்க வேண்டும்

நிபந்தனையின் கீழ் SD&CC யிடம் கையளிப்பு

பம்பலப்பிட்டி மற்றும் வெள்ளவத்தை ரயில் நிலையங்களில் பிரவேசிப்பதற்காக மரையின் ட்ரைவ் வீதிக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள பாதசாரிக் கடவைகளின், ஆபத்தான நிலைமையை கருத்திற்கொண்டு,புனரமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

தற்காலிக படிக்கட்டுகளைஅமைத்தல் மற்றும் துரிதமாக பாதசாரிக் கடவைப் பாலத்தை மீளமைத்தல் பணிகளே, இவ்வாறு துரிதப்படுத்தப்படவுள்ளன.

இதற்கமைய, ஆறு மாதங்களுக்குள் இவற்றை செய்து முடிக்கவென அரச அபிவிருத்தி மற்றும் கட்டுமானங்கள் கூட்டுத்தாபனத்துக்கு இப்பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## காணி எடுத்தல் சட்டம்
### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல.** திம்/1/8/3/60 அதி

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு விசாரணைகள் 2023 நவம்பர்13 ஆம் திகதி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் அன்றைய தினம் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2321/63 மற்றும் 2023.03.02 இலக்க அதிவிசேட வர்தமானியை பார்க்கவும்.

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகம் | : | திம்பிரிகஸ்யாய |
| ஆரம்ப வரைபட இல: | : | கொ. 10009 |
| துண்டு இல | : | 01 |
| முழு காணியின் விஸ்தீரணம் | : | 0.0175 ஹெக்டயார் |
| கிராமத்தின் பெயர் | : | கிருலப்பனை |

**பிரியந்தா திசாநாயக,**
**பிரதேச செயலாளர்,**
**திம்பிரிகஸ்யாய.**

2023.11.06.

**திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திலிருந்து.**

SriLankan Airlines oneworld

## பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் (PB 67)** ஆண்டறிக்கை 2022/2023, ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பு மற்றும் பதிலாள் படிவம் கம்பனியின் வெப்தளமான **www.srilankan.com/AGM** இலும் பங்குடமையாளர் சமூகத்தளமான கீழே குறிப்பிடப்பட்ட வெப்தளத்திலும் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது.
**www.srilankan.com/shareholdercommunitysite**

பின்வரும் QR குறியீடுகள் ஸ்கேன் செய்வதன் மூலம் உறுப்பினர்கள் தங்கள் கைபேசி ஊடாகவும் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பை அணுகலாம்.

ஆண்டறிக்கை

கூட்டம் பற்றிய அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏயார்லைன்சின் பங்குடமையாளர்களது 45வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2023 நவம்பர் 30ஆம் நாள் வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் ‘சினிமா லவுஞ்ச்’ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2023 மாச்சு 31இல் முடிவடைந்த நிதியியல் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அனைத்தையும் இலத்திரனியல் தொடர்பூட்டல் தளத்திற்கு மாறிக்கொள்ளுமாறும் சாத்தியமானளவிற்கு காகிதங்களின் பயன்பாட்டினைக் குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்ற 2022 ஆகஸ்ட் 8ஆம் திகதியிடப்பட்ட 04/2022ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் நியதிகளுக்கிணங்க, PDF படிவத்தில் மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருக்கும

ஏதேனும் விளக்கங்களுக்கு, கம்பனிச் செயலாளரை தொடர்பு கொள்ளவும்.
மின்னஞ்சல் : comsec@srilankan.com தொலைபேசி : 0197331010

திருமதி டல்ரீன் திருகுமார்
**கம்பனிச் செயலாளர் சேவைகளின் குழுத் தலைவர்/ கம்பனிச் செயலாளர்**
2023 நவம்பர் 8

## பாதுகாப்பு அமைச்சு
### தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)
**மாவட்ட அலுவலகத்தை நடத்திச் செல்வதற்காக வீடுகள், கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கோரல்**

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் கீழ்க்காணும் மாவட்ட அலுவலகங்களை நடத்திச் செல்வதற்காக வீடுகள் அல்லது கட்டிடங்களை மாதாந்த வாடகை கொடுப்பனவின் அடிப்படையில் இரண்டு வருட (02) கால எல்லைகுத் தேவையாக உள்ளது.

| | மாவட்ட அலுவலகம் | வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள தேவையான கால எல்லை |
|---|---|---|
| 01 | காலி | 2024.01.01 - 2025.12.31 |
| 02 | மாத்தளை | 2024.01.01 - 2025.12.31 |
| 03 | களுத்துறை | 2024.02.01 - 2026.01.31 |
| 04 | கேகாலை | 2024.02.1 - 2026.01.31 |
| 05 | கண்டி | 2024.03.01 - 2026.02.31 |
| 06 | நுவரெலியா | 2024.04.01 - 2026.03.31 |
| 07 | மாத்தறை | 2024.04.01 - 2026.03.31 |
| 08 | பதுளை | 2024.06.01 - 2023.05.31 |

விலைமனு கோரல் பத்திரத்தை www.nbro.gov.lk இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2023.11.29 பி.ப 2.00இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு “தலைவர், பெறுகைக்குழு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம், இல.99/1, ஜாவத்த வீதி, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது மேற்படி முகவரியில் உள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடல் அல்லது info@nbro.gov.lk ஈமெயில் முகவரிக்கு அனுப்பலாம். உங்களது விலைமனுப்பத்திரங்களுடனான கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“குறித்த மாவட்ட அலுவகத்திற்கு கட்டிடமொன்றை வாடகைக்கு பெறுவதற்கான விலைமனுக்கள்”** என்று குறிப்பிடல் வேண்டும்.

இதுபற்றிய விசாரணைகளுக்கு நிர்வாகப் பிரிவு, தொ.பே இல 011-2588946 / 2503826 சேவை நீடிப்பு - 560ஐ அழைக்கலாம்.

**தலைவர் / பெறுகைக்குழு**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**இல. 99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு - 05**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்
### மாகாண கல்வித் திணைக்களம்
### மத்திய மாகாணம்
### 2023(2024) இற்காக 3 ஆம் தவணை பரீட்சை கேள்வித் தாள்கள் மற்றும் விடைத்தாள்களை அச்சடித்தல் மற்றும் விநியோகித்தலுக்கான பெறுகை

**CP/EDU/F/08/3rd Term**

தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையுமான 3 ஆம் தவணை பரீட்சை தாள்களை அச்சடித்தல் மற்றும் விநியோகப்படுத்தல் ஆகியவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மாகாண கல்வி பணிப்பாளரின் (மத்திய மாகாணம்) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

2. விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

| பொதி இல. | தரம் | ஒவ்வொரு மொழிமூலத்திற்கான தாள்களின் தொகுதிகள் (அண்ணளவாக) | | | விலைமனு பிணையின் பெறுமதி (இ.ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம். | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | |
| 1. | 06 | 27500 | 15200 | 3600 | 300,000/- |
| | 07 | 27200 | 15200 | 3800 | |
| | 08 | 26700 | 14800 | 3600 | |
| | 09 | 27800 | 14800 | 3200 | |
| 2. | 10 | 30000 | 13400 | 3800 | 150,000/- |
| | 11 | 29500 | 13400 | 3200 | |

விலைமனுதாரர் ஒன்று அல்லது இரு பொதிகளுக்கும் விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்கலாம். விலைமனுதாரர் ஒவ்வொரு பொதியிலும் அனைத்து தரங்கள் மற்றும் அனைத்து மொழிமூலங்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தகைமையை பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு பொதியும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும்.

ஒப்படைத்தலுக்கான அமைவிடம்: வழங்கல் மற்றும் விநியோகமானது மத்திய மாகாணத்திலுள்ள 15 வலய கல்வி அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். (கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா)

3) விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

4) 2023 நவம்பர் 9 ஆம் திகதியிலிருந்து 2023 நவம்பர் 28 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5) தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

அ. கடந்த மூன்று வருடங்களில் (2019-2022) ஆகக் குறைந்த சராசரி நிதிப்புரள்வானது 20 மில்லியனாகவிருத்தல்.
ஆ. பரீட்சை தாள்களை அச்சடிப்பதில் ஆகக் குறைந்தது 3 வருட கடந்தகால அனுபவம்.
இ. அச்சடிப்பதில் ஆகக் குறைந்தது 5 வருட கடந்த கால அனுபவம்.
ஈ. விலைமனுதாரர் தொழில்நுட்பரீதியான தகைமை மற்றும் தேர்ச்சியுள்ள பணியாளர் குழுவைக் கொண்டுள்ள வேலைதளத்தைக் கொண்டிருத்தல்.

6) 2023 நவம்பர் 9 ஆம் திகதியிலிருந்து 2023 நவம்பர் 28 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு பொதிக்கும் இரண்டாயிரம் ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளருக்கு செலுத்திய பின்னர், நிதிக்கான மேலதிக கல்விப் பணிப்பாளர் என்ற முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7) மாகாண கல்வித் திணைக்களத்தில் 2023 நவம்பர் 17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

8) 2023 நவம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘உரித்தான பொதிப் பெயர் மற்றும் பொதி இலக்கம்’’ ஆகியவற்றைக் குறிப்பிட்டு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கண்டி, மத்திய மாகாண, மாகாண கல்வித் திணைக்கள கணக்காளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள ‘‘கேள்விப் பெட்டியில்’’ சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

9) 2023 நவம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கண்டி, மத்திய மாகாண, மாகாண கல்வித் திணைக்களத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். மேலே குறிப்பிட்டவாறான ‘‘விலைமனுப்பிணையொன்றுடன்’’ அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10) 081-2203774 என்ற தொலைபேசி / தொலைநகலூடாக மேலதிக தகவலை கண்டி, மத்திய மாகாண, மாகாண கல்வித் திணைக்கள நிதிக்கான பிரதி கல்விப் பணிப்பாளரிடமிருந்து விலைமனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**M.G. Amarasiri Piyadasa**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (மத்திய மாகாணம்),**
**கண்டி.**
**திகதி: 2023 நவம்பர் 8 ஆம் திகதியன்று.**

**தொலைபேசி:** 081-2203774
**தொலைநகல் இல.:** 081-2223343 / 081-2203774

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 22ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 23

## குறள் தரும் சிந்தனை



குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும்

தன்மீது நடத்தப்படும் இழிவான தாக்குதலைக் கண்டு கலங்கினாலோ, பணியாற்றக் காலம் வரட்டும் என்று சோர்வுடன் தயக்கம் காட்டினாலோ குடிமக்களின் நலன் சீர்குலைத்துவிடும்.

# அரிசி விலையைக் குறைப்பதற்காக நெற்செய்கையை அதிகரிக்க ஏற்பாடு

இலங்கையானது நெற்செய்கையைப் பிரதானமாகக் கொண்ட விவசாயப் பொருளாதார நாடாகும். நெற்செய்கைக்குத் தேவையான சீதோஷண நிலையையும் மண்வளத்தையும் இயற்கையாகவே பெற்றுக்கொண்டுள்ள இந்நாடு, மன்னராட்சிக் காலம் முதல் நெற்செய்கையில் முன்னணியில் திகழ்கிறது.

இந்நிலையில் நெற்செய்கையை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசனப் பாரம்பரியம் இந்நாட்டில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வயலும், குளமும், வழிபாட்டிடமும் பின்னிப்பிணைந்ததாக இக்கலாசார மரபுரிமை உருவாகியுள்ளது.

ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு உள்ளாகாத காலப் பகுதியில் நெற்செய்கையில் தன்னிறைவு அடைந்து காணப்பட்ட இந்நாடு, ஒரு காலத்தில் தெற்காசியாவின் நெற்களஞ்சியமாகவும் விளங்கியது. அத்தோடு வெளிநாடுகளுக்கும் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியரின் ஏகாதிபத்தியத்திற்கு உள்ளானதைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. பெருந்தோட்ட பயிர்ச் செய்கையைப் பிரித்தானியர் இலங்கைக்கு அறிமுகப்படுத்தினர்.

இந்நிலையில் இந்நாட்டின் நெற்செய்கைப் பாரம்பரியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டதோடு அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளும் பராமரிப்பற்ற நிலையில் கைவிடப்பட்டன. அதனால் நெற்செய்கையில் இருந்து பயிர்ச்செய்கையாளர்கள் தூரமாகும் நிலை உருவானது.

ஆனாலும் நாடு சுதந்திரமடைந்த பின்னர் நெற்செய்கையை மீண்டும் பழைய நிலைக்குக் கட்டியெழுப்பும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. என்றாலும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு முற்பட்ட வளர்ச்சியை நெற்செய்கையில் இன்னும் அடையக் கிடைக்கவில்லை.

அதேநேரம் கடந்த ஆட்சியாளர்கள் முன்னெடுத்த இரசாயனப் பசளைத் தடையால் நெற்செய்கையாளர்கள் வேளாண்மைச் செய்கையைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்கள் அறிமுகப்படுத்திய இயற்கை பசளையைப் பயன்படுத்தி நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு உரிய விளைச்சலும் கிடைக்கப்பெறவில்லை. இதனால் நெற்செய்கையாளர்கள் பொருளாதார நஷ்டத்திற்கு உள்ளாகினர். இந்நிலையில் நாட்டுக்குத் தேவையான அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நெற்செய்கையாளர்களுக்கு இரசாயனப் பசளையை உடனடியாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் ஊடாக குறுகிய காலப்பகுதியில் நாட்டின் நெற்செய்கை பழைய நிலைக்குத் திரும்பும் சூழல் உருவானது. இதன் பயனாக குறுகிய காலப் பகுதியில் நெற்செய்கையில் தன்னிறைவு அடைய முடிந்திருக்கிறது.

தற்போது நாட்டில் 8 இலட்சம் ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. அதன் பயனாக வருடமொன்றுக்கு 5.2 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடையை நாடு பெற்றுக்கொள்கிறது. இதன் மூலம் 3.1 மில்லியன் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் வருடமொன்றுக்கு 2.4 மில்லியன் மெற்றிக்தொன் அரிசி நாட்டின் நுகர்வுக்கு அவசியமானது.

தற்போது நாடு நெல்விளைச்சலில் தன்னிறைவு அடைந்துள்ள போதிலும் நாடெங்கிலுமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு போகத்திலும் ஒரே மாதிரியான நெல்விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. ஹெக்டேயருக்கு 2.5 முதல் 4.5 மெற்றிக்தொன் நெல் அறுவடை கிடைக்கப்பெறுகின்ற போதிலும், சில மாவட்டங்களில் ஹெக்டேயருக்கு சுமார் 11 மெற்றிக்தொன் நெல் விளைச்சலையும் விவசாயிகள் பெற்றுக்கொள்கின்றனர். இது தென்கிழக்கு ஆசியாவிலேயே அதிகூடிய விளைச்சலாகும். இந்த விளைச்சலை முழுநாட்டிலும் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் பரவலாக உணரப்பட்டுள்ளது. அதன் ஊடாக உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடிவதோடு, அரிசியைக் குறைந்த விலையில் மக்களுக்கு சந்தைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

இந்நிலையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரிசியில் தன்னிறைவு அடையும் வகையில் அடுத்துவரும் ஆறு போகங்களிலும் நெற்செய்கையை இரட்டிப்பாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு விவசாய அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய அறிவுறுத்தலாகும். அரிசியை பிரதான உணவாகக் கொண்ட நாடாக இருப்பதால், அரிசியை குறைந்த விலையில் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பது இன்றியமையாததாகும். அதற்காக உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அப்போது அரிசி இறக்குமதிக்கான அந்நியச் செலாவணியையும் மீதப்படுத்திக் கொள்ள முடியும்.

ஜனாதிபதியின் இந்த அறிவுறுத்தலுக்கு அமைய நெற்செய்கையின் விளைச்சலை அதிகரிப்பதற்கு ஏற்ற தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதோடு, அது தொடர்பில் விஷேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். இவற்றுக்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அரசின் ஊடாக வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே இத்திட்டங்களின் ஊடாக நெல் விளைச்சல் அதிகரிப்பதும் மக்கள் குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக்கொள்ளும் காலமும் வெகுதொலையில் இல்லை என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# மனிதப்பேரவலம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென்று உலகநாடுகள் வலியுறுத்தல்!



## காஸா மீது இஸ்ரேலினால் யுத்தம் தொடுக்கப்பட்டு ஒரு மாதம் நிறைவு

காஸா மீதான யுத்தம் ஆரம்பமாகி நேற்றோடு (7.11.2023) ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. ஹமாஸ் இஸ்ரேலினுள் பிரவேசித்து 07.10.203 அன்று நடத்திய தீவிர தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் போர் தொடுத்தது.

வான், கடல், நிலம் என மூன்று வழிகளின் ஊடாகவும் காஸா சுற்றிவளைக்கப்பட்டு பெருமெடுப்பில் இந்த யுத்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. காஸாவுக்கான தண்ணீர், மின்சாரம், மருந்துப்பொருட்கள், எரிபொருள், உணவுப் பொருட்கள் என்பவற்றின் விநியோகத்தை முற்றாகத் தடுத்து நிறுத்திவிட்டே இந்த யுத்தத்தை இஸ்ரேல் நடத்துகிறது. இஸ்ரேலின் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட படையினர் நவீன ஆயுதங்களுடன் 23 இலட்சம் பலஸ்தீன மக்கள் வாழும் 365 சதுர கிலோ மீற்றர் கொண்ட காஸாவை சுற்றிவளைத்து இப்போரை முன்னெடுத்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான பீரங்கிகள், யுத்த விமானங்கள் அடங்கலாக நவீனரக ஆயுதத்தளபாடங்கள் இந்த யுத்தத்தில் பயன்படுத்தப்படுகின்றன. தொடரான வான்வழித் தாக்குதல்கள், பீரங்கித் தாக்குதல்கள், ஏவுகணைத் தாக்குதல்கள் என கடும் போருக்குள் தள்ளப்பட்டுள்ளது காஸா. அதனால் காஸா நிலமே சின்னாபின்னப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு குண்டும் நெருப்புப் பிளம்பாக வெடித்துத் சிதறுகின்றன. யுத்தவிமானங்கள் நடத்தும் ஒவ்வொரு குண்டுத் தாக்குதலும் நிலத்தில் பாரிய குழியை ஏற்படுத்துகின்றது.

மக்கள் குடியிருப்புக்கள், அகதி முகாம்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், அம்புலன்ஸ் வண்டிகள் என எல்லாம் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. தொலைத்தொடர்பு சேவை அவ்வப்போது முடக்கப்பட்டு வருகின்றது. வைத்தியசாலைகளில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மருந்துகள் இல்லாத அதேநேரம் வைத்தியசாலைகளின் ஜெனரேட்டர்கள் இயங்குவதற்கும் எரிபொருள் இல்லாத நிலைமை காணப்படுகிறது. சில வைத்தியசாலைகள் சூரியசக்தி மூலம் ஒரளவாவது மின்சாரத்தைப் பெற்று சில பகுதிகளாவது இயங்கின. ஆனால் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலினால் சூரியசக்தி கலங்களும் அழிக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு உணவு வழங்கக்கூடிய பேக்கரிகளும் குண்டுத்தாக்குதலுக்குத் தப்பவில்லை. காசா இரத்தத்தினாலும் கண்ணீராலும் தோய்ந்துள்ளது. எங்கும் மரண ஓலம். மக்கள் செய்வதறியாது திகைத்துப் போயுள்ளனர். மரணபீதி காஸாவில் குடிகொண்டுள்ளது. காஸாவின் தற்போதைய நிலைமை மோசமான ஆரோக்கியப் பாதிப்புக்களை ஏற்படுத்துமென உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான கொடிய யுத்தம் ஆரம்பமானது முதல் இற்றைவரை 10,022 பேர் காஸாவிலும் 155 பேர் மேற்குக்கரையிலும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 4,145 பிள்ளைகளாவர். மேலும் 27,000 பேர் காயமடைந்துள்ளனரென பலஸ்தீன சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இஸ்ரேல் தரப்பில் 1,405 பேர் கொல்லப்பட்டதோடு 5,600 பேர் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு இராணுவத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்த யுத்தத்தினால் காஸாவிலுள்ள 35 வைத்தியசாலைகளில் 16 வைத்தியசாலைகள் செயலிழந்துள்ளன. அத்தோடு அடிப்படை சுகாதார வசதிகளை வழங்கக்கூடிய 72 மருத்துவ கிளினிக்குகளில் 51 கிளினிக்குகள் செயலிழந்துள்ளன. 50 அம்புலன்ஸ் வண்டிகள் சேதமடைந்துள்ளன.

காஸா 23 இலட்சம் பலஸ்தீன் மக்களைக் கொண்ட பிரதேசமாகும். அவர்களில் 17 இலட்சம் பேர் பலஸ்தீனத்தை பூர்வீகமாகக் கொ ண்ட அகதிகளாவர். இவர்கள் காஸாவிலு ள்ள பாரிய 8 அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். அவற்றில் ஜபாலியாவில் 116,000 பேரும், சாட்டில் 90,000 பேரும், புரைஜ்ஜில் 90,000 பேரும், நுசெய்ரத்தில் 85,000பேரும், டெய்ர் அல் பலாஹ்வில் 26,000 பேரும், மகாஸீயில் 33,000 பேரும், கான் யூனுஸில் 88,000 பேரும் ரபாவில் 133,000 பேரும் தங்கியிருப்பதாக பலஸ்தீன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இவற்றில் பல முகாம்கள் இந்த யுத்தத்தில் தாக்கப்பட்டுள்ளன.

இந்த யுத்தம் காரணமாக ஏற்பட்டுவரும் சேதங்களும் அழிவுகளும் உலகெங்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. மனித சமூகமே வெட்கித்தலைகுனியும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இந்நிலையில் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை உலகெங்கிலும் மேலெழுந்துள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் பாரிய ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. ஒவ்வொரு ஆர்ப்பாட்ட ஊர்வலமும் மக்கள் வெள்ளமாக காட்சியளிக்கிறது.

ஐ.நா. செயலாளர்நாயகம் அந்தோனியோ குட்டரெஸும் ஏனைய உலக தலைவர்களும் காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 120 நாடுகளின் ஆதரவுடன் காஸாவில் மனிதாபிமான உடனடி யுத்தநிறுத்தத் தீர்மானம் 27.10.2023 இல் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இருந்தும் ஐ.நா. செயலாளர் நாயகத்தினதோ, உலக நாடுகளதோ, மக்களதோ கோரிக்கைகளை கண்டுகொள்ளாத இஸ்ரேல், ஐ.நா. தீர்மானத்தையும் நிராகரித்தபடி யுத்தத்தை முன்னெடுத்துள்ளது.

ஐ.நா.வினதும் உலக நாடுகளதும் கோரிக்கையை மதிக்காத இஸ்ரேலின் போக்கு சர்வதேச மட்டத்தின் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. இப்போக்கை உலகில் வேறு நாடுகளும் உதாரணமாகக் கொள்ளுமாயின் ஐ.நா. சபை நிறுவப்பட்ட நோக்கத்தையே தவிடுபொடியாக்கிவிடும்.

இதேவேளை, இஸ்ரேலின் இப்போக்கு உலகளாவிய ரீதியில் கடும் விமர்சனத்திற்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகியுள்ளது. இந்நிலையில் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை சில நாடுகள் துண்டித்துக்கொள்ள ஆரம்பித்துள்ளன. இந்நிலைமை தொடருமானால் இஸ்ரேல் தனிமைப்படுத்தப்படக் கூடிய நிலைமை ஏற்படலாம்.

அதேவேளை இந்த யுத்தத்தினால் 48 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது

ஐ.நா.வின் கோட்பாடுகளையும் தீர்மானங்களையும் மாத்திரமல்லாமல் மனிதாபிமான சட்டங்களையும் சர்வதேச சட்டங்களையும் மதித்து செயற்பட இஸ்ரேல் முன்வர வேண்டும் என்று உலக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. காஸாவின் தொடருகின்ற மனிதப்பேரவலம் நிறுத்தப்பட வேண்டுமென்பதே அமைதி, சமாதானத்தை நேசிக்கும் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும்.



மர்லின் மரிக்கார்...

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரால் கல்முனையில் பயனாளர்களுக்கு தையல் இயந்திரங்கள்

## ரஹ்மத் மன்சூரின் அழைப்பின்பேரில் விஜயம்

பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறூக் புர்கி மற்றும் அவரது ஆலோசகரான பைசல் அலிகான் ஆகியோர் கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் இரண்டாவது தடவையாக கடந்த 6 ஆம் திகதி கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டு தேவையுடைய சில பயனாளர்களுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரங்கள் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வானது கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. வாழ்வாதாரங்களுக்கான உதவியாகவே தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களையும், அவர்களின் இடங்களையும் பார்வையிட்டு அவர்களது தேவைப்பாடுகளையும் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டார். உயர்ஸ்தானிகர் அங்கு உரையாற்றுகையில், அம்பாறை மாவட்டத்துக்கு இன்று விஜயம் மேற்கொள்வது இரண்டாவது தடவையாகும் என்றும், தாம் முதன் முதலாக மூன்று மாதங்களுக்கு முன்னர் ரஹ்மத் மன்சூர் விடுத்த அழைப்பின் பேரிலே அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.





எதிர்காலத்தில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் அடையாளப்படுத்துகின்ற பயனாளர்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கத்தின் மூலம் தேவையான அனைத்துவித உதவிகளையும் அமைப்பின் ஸ்தாபகரும், முன்னாள் பிரதிமுதல்வருமான ரஹ்மத் மன்சூர் அவர்களின் வழிகாட்டலில் செய்யவிருப்பதாகவும் இதன்போது அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான நீர்வசதிகள் அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் பாகிஸ்தான் அரசாங்கத்தின் மூலம் உயர்ஸதானிகரினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பவுண்டேஷன் உறுப்பினர்கள், குறித்த பயனாளர்கள், நலன்விரும்பிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நூருல் ஹுதா உமர்...

# ஆட்டுக்கும் சிறுவனுக்குமான நட்பை வைத்து மாத்தளை சோமு எழுதிய 'ஐயனார் ஆடு' நாவல்

மாத்தளையில் பிறந்து மலையக எழுத்தாளராக அறிமுகமாகி, அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து காத்திரமான படைப்புகளால் புலம்பெயர் எழுத்தாளர்களில் முக்கியமானவராக திகழும் மாத்தளை சோமு, தமிழகத்தின் ஆனந்தவிகடன், குமுதம், காமதேனு, தாமரை, இந்தியா டுடே தமிழ், புதிய பார்வை ஆகிய இதழ்களிலும் கலைமகள், இந்து திசை தமிழ், ஆனந்தவிகடன், அமுதசுரபி ஆகியவற்றின் தீபாவளி மலர்களிலும் தமது படைப்புகளால் புகழ் பெற்றுள்ளார்.

இவருக்கு மலேசியாவில் குறிப்பிடத்தக்க தமிழ் வாசகர்கள் இருக்கிறார்கள். இவரின் அனைத்து நூல்களும் அங்கு வெளியாகியிருக்கின்றன. மலேசிய நண்பன், மக்கள் ஓசை ஆகிய ஞாயிறு இதழ்களில் தொடர்கட்டுரைகள், கதைகள் எழுதியிருக்கிறார் இவர்.




இவரின் எழுத்துக்களத்தை மூன்றாகப் பார்க்கலாம். ஒன்று மலையகத்தைப் பின்புலமாகக் கொண்ட சிறுகதைகள், நாவல்கள்.

இரண்டு புலம்பெயர்ந்த தமிழரின் வாழ்வு குறித்த மற்றும் ஈழத்தின் போர்ச்சூல் குறித்த சிறுகதைகள்.

மூன்றாவது தமிழகத்தைப் பின்னணியாகக் கொண்ட சிறுகதைகள், நாவல்கள்.

மூன்று வெவ்வேறு திசைகளில் வாழும் மக்களையும் தமது படைப்புகளில் வெளிக் கொணர்ந்த இவரை லண்டனைச் சர்ந்த இலக்கிய விமர்சகர் பேராசிரியர் மு.நித்தியானந்தம், மாத்தளை சோமுவின் 100 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பின் முன்னுரையில் 'மலையகத்தின் திரிவேணி சங்கமம்' என்று எழுதியிருக்கின்றார்.

'தோட்டக்காட்டினிலே' என்ற சிறுகதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதிய (அமரர்) பேராசிரியர் கைலாசபதி 'ஒரு கமராவின் மூலம் பார்ப்பது போல் அந்த ஜன்னல் காட்சிகள் அழகாக இருந்தன' என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய ஜன்னல் காட்சிகளை, வாழ்க்கைக் கூறுகளை, உயிரோவியங்களை மாத்தளை சோமுவின் படைப்புகளில் காணலாம். தமிழகம் இவருக்கு மூதாதையர் பூமியானபோதும் அவ்வப்போது அங்கு சென்று தங்கிப் போயிருக்கிறார். இக்காலப்பகுதியில் இவருக்கு ஜன்னல் காட்சிகள் கண்களில் பட்டிருக்கின்றன. அதனை உள்வாங்கியதில் பல சிறுகதைகள், நாவல்கள் என்பவற்றை எழுதினார். அவ்வாறு எழுதப்பட்ட ஒன்றுதான் 'மூலஸ்தானம்' என்ற நாவல்.



அந்நாவலுக்கு முன்னுரை வழங்கிய இந்திராபார்த்தசாரதி 'தமிழ்நாட்டில் சாதிப்பிரச்சினையை மையமாக வைத்துக்கொண்டு நாவல் எழுதுவது என்பது கத்திமுனையில் நடப்பதுபோல் மிகக் கடினமான பயிற்சி. மாத்தளை சோமு இதை வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார்' என்று எழுதியிருக்கிறார். அவரின் பாரட்டை உறுதி செய்வதைப் போன்று இலங்கையில் 'விபதி' என்று அழைக்கப்படும் 'சுதந்திர இலக்கியச் சங்கம்' என்ற தமிழ், சிங்களப் படைப்புகளுக்குப் பரிசு வழங்கும் அமைப்பு 1998இல் வெளிவந்த சிறந்த நாவல்களுக்கான விருதை வழங்கியது.

தற்போது தமிழகத்தின் கிராமங்களில் குலதெய்வமாக வணங்கி வரும் ஐயனார் கோவில் குறித்தும் அக்கோயில் வழிபாடு மற்றும் காவு கொடுத்தல் குறித்தும் இவர் எழுதியதே 'ஐயனார் ஆடு' என்ற நாவலாகும். உயிரைக் கொல்வது – பலி கொடுப்பது சரியா என்பது பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்கத் தெரியாத ஒரு சிறுவன், அவனுக்காக நேர்த்தி செய்யப்பட்ட ஓர் ஆட்டோடு கொண்ட நட்பு பற்றிய அவனுடைய எண்ணங்களே நாவலாக விரிந்துள்ளன.

'பலி கொடுத்தல்' என்ற ஒற்றைச் சொல்லை மையமாக வைத்தே நாவல் எழுதப்பட்டிருக்கிறது.

இந்நாவல் ஒரு திரைப்படமாக்கும் கதையைக் கொண்டது. 2021இல் வந்த சிறந்த நாவல்களில் ஐயனார் ஆடும் ஒன்றாகும்.

மாத்தளை செல்வா...

# நகர்வலம்



### தொழில் வேலைவாய்ப்பு அமைச்சினால்

# வெளிநாடு செல்வோருக்கு வழங்கப்படும் பயிற்சியை ஒருபோதும் நிறுத்த மாட்டேன்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



வெளிநாட்டு தொழிலுக்காக செல்லும் முன் வழங்கப்படும் பயிற்சியை எக்காரணம் கொண்டும் நிறுத்தப் போவதில்லை என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வீட்டுப் பணிப்பெண்களுக்கு கட்டாய 28 நாள் பயிற்சி அளிக்கும் நடவடிக்கையை அவதூறாகப் பேசும் ஆட்கடத்தல்காரர்களே இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கொரிய நாட்டின் விவசாயத்துறையில் தொழில்வாய்ப்புகளை இலக்காகக்கொண்ட பயிற்சி மற்றும் வீட்டுப்பணிப்பெண் வேலைகளுக்கான தொழில் சார்ந்த பயிற்சிகளை வழங்கும் 'ஸ்ஜோன்க் வேர்ல்ட்' (Sjong World) நிறுவனத்தின் பயிற்சி நிலையம் மற்றும் அலுவலகத்தை, காலியில் (06) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

'ஒரு காலத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் இலங்கையர்களை எந்தவித பயிற்சியும் இல்லாமல் வெளிநாடுகளுக்கு அனுப்பியது. ஆனால், முறையான பயிற்சியின்றி யாரையும் அனுப்புவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளோம். சில முகவர் நிறுவனங்கள் இதில் திருப்தி அடையாமல் போகலாம். எந்த சூழ்நிலையிலும் இந்த முடிவை மாற்றிக் கொள்ள மாட்டேன் .

நமது நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாலான பட்டதாரிகளில் பெரும்பாலானவர்கள் பெண்கள். ஆனால் பெரும்பாலான பெண்கள், தொழில்களில் ஈடுபடாமல் இருக்கின்றனர். இருப்பினும் படித்த பெண்கள் திருமணத்திற்கு பிறகு தொழில்களுக்கு செல்வதில்லை. விசேடமாக நமது நாட்டில் வணிகத் துறையில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவு. பெண்களின் தொழில் முயற்சியும் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது.

நாட்டின் தொழில்முனைவுக்கு வீட்டை நிர்வாகம் செய்யும் பெண்கள் முன்வருவார்களாயின் நாட்டுக்கு பெரும் பலமாக அமையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். கொரியாவில் தொழில்வாய்ப்புகளுக்கு இலங்கையர்களை அனுப்பும் ஆற்றல் அரசாங்கத்துக்கு மட்டுமே உண்டு. இரு நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைக்கு அமைவாக இவை இடம்பெறுகின்றன. ஆனால் கொரிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாக நெசவாளர்கள், ஓவியர்கள் மற்றும் தோட்டப்பணியாளர் போன்றவர்களையும் கப்பல் தொழில் துறைகளுக்கும் அனுப்ப முடிந்திருப்பதாகவும் அமைச்சர் இதன்போது கூறினார். கொரியாவில் எமக்கு தூதரகம் உள்ளது. ஆனால் தூதரகங்கள் மூலம் செய்ய வேண்டிய சில பணிகள் அங்கு பணியாளர்கள் இல்லாததால் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் தூதர்களுக்கு இவற்றைச் செய்ய நேரமில்லை.

இதில், அரச துறையில் போன்றே தனியார் துறை மூலமும் கொரிய தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க உதவுவதிலும், நாட்டின் வெளிநாட்டு இருப்புக்களை மேம்படுத்துவதிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்ட தொழிலாளர்கள் ஆற்றிய முக்கிய பங்கை சுட்டிக்காட்டிய அமைச்சர், 'கடந்த ஆண்டு மே மாதம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக பதவியேற்றதில் இருந்து, 7 பில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட தொகையை புலம்பெயர் தொழிலாளர்கள் அனுப்பியுள்ளனர். இது நாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த பங்களிப்பை வேறு எந்த துறையும் இதுவறை வழங்கவில்லை. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ள தொழிலாளர்களுக்கு இதற்காக நன்றி தெரிவிக்கிறேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு

**திறப்பனை தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி திணைக்கள மற்றும் பொறியியலாளர் திணைக்கள அதிகாரிகளுக்கு, மாற்றுத்திறனாளிகளுக்கான நிறுவனங்களை எவ்வாறு அணுகுவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று அநுராதபுரம் மாகாண சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளின் அணுகல் தன்மை குறித்து அரசு அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் அநுராதபுர மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் சுமித் ரத்நாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் குமாரி ஜயசேகர, உள்ளூராட்சி ஆணையாளர் நிஷாந்த ரோய், வடமத்திய மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் டபிள்யூ.எம்.சி.கே. வன்னிநாயக்க, வடமத்திய மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் பொறியியலாளர் தீமதி பெர்னாண்டோ, மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் பிரசாதி விஜேசிங்க உள்ளிட்டோர் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.



சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை அவரது அமைச்சில் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியபோது பிடிக்கப்பட்ட படம்.

# மத்ரஸாக்களில் அரபு மொழியோடு ஒழுக்கமும் போதிக்கப்பட வேண்டும்

## சீனன்கோட்டை மீலாத் நிகழ்வில் அலிஸாஹிர் மௌலானா எம்.பி

எமது மத்ரஸாக்களில் அரபு மொழி போதிக்கப்படுகின்ற அதேநேரம், நல்லொழுக்கம் போதிக்கப்படுவதாக தெரியவில்லை. பெரும்பாலான மத்ரஸா மாணவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும்போதே இவ்வாறு கேட்கத் தோன்றுகிறது என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

பேருவளை சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத்தின் 42 ஆவது வருட மீலாது விழாவும் பரிசளிப்பு விழாவும் (4) அல்ஹுமைஸராவின் எஸ்.எம்.ஜாபீர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.ஏ.முக்தார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அலிஸாஹிர் மௌலானா;

ஜும்ஆ பிரசாரங்களை நிகழ்த்தும் எமது பெரும்பாலான மௌலவிமார்கள் கூட குத்பா பிரசங்க மிம்பர்களையும் அரசியல் மேடைப் பேச்சுக்களைப் போன்று ஆவேசமாக நிகழ்த்துவதைக் காண்கிறோம். சன்மார்க்க பிரசங்கங்களுக்கு இது அழகல்ல.



மத்ரஸாக்களில் கற்று வெளிவந்தவர்கள் இஸ்லாம் கூறும் நல்லொழுக்க நற்பண்புகளுக்கு இலக்கணமாக திகழ வேண்டும். இதற்கு வழிவகுக்கும் வகையில் கல்வி போதனைகள் அமைய வேண்டும்.

பாலஸ்தீனத்தில் தினந்தோறும் பல நூற்றுக்கணக்கான எமது சகோதரர்களின் உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் எடுக்கிற நேரம் அல்ல. ஆனால் எமது உயிரிலும் மேலான உத்தம நபியின் பிறந்த தின விழா மேடை என்பதாலேயே இங்கு வருகை தந்தேன். பலஸ்தீனத்தில் நடந்தேறும் பரிதாப நிலை கண்டு பிற சமூகத்தவர்களே இஸ்ரேலை கண்டிக்கவும் பலஸ்தீன போராளிகளுக்கு ஆதரவு தெரிவிக்கவும் முன் வருகிறார்கள். இது மனிதாபிமான நல்லெண்ணத்தையே காட்டுகிறது என்றார். சீனன்கோட்டையைச் சூழ இயங்கும் குர்ஆன் மத்ரஸாக்களைச் சேர்ந்த வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு தங்க நகை உள்ளிட்ட பரிசில்களும் சான்றிதழ்களும் இதன்போது அதிதிகளால் கையளிக்கப்பட்டன.

வாலிபர் ஹழரா ஜெமாஅத் செயலாளர் டாக்டர் முர்ஷித் ரிஸாம் நிகழ்வின் இறுதியில் நன்றியுரை வழங்கினார்.

### அநுராதபுரம் மாவட்டத்தில்;

# தமிழ்மொழி மூலம் 17 பேர் புதிய அதிபர்களாக நியமனம்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



அநுராதபுரம் மாவட்டத்தில் அதிபர் சேவை தரம் 111 தமிழ்மொழி மூலம் சித்திபெற்றோருக்கு வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் (06) இடம்பெற்ற வைபவத்தின்போது மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தினால் நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் தமிழ் மொழிமூலமான 17 பேர் புதிய அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இம்மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்திற்கு பாடசாலை முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர் இவர்கள் பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வுக்கு வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் சமரகோன் மற்றும் வடமத்திய மாகாண முதலமைச்சின் செயலாளர் மற்றும் வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். சமரகோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பேருவளை ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் அடிக்கல் நாட்டு விழா

## 'சயீடா' நிதியுதவியில் பாடசாலைக்கு புதிய கட்டடம்

பேருவளை, பொல்கொடுவ ரோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலயத்தின் வகுப்பறை கட்டடங்களை பழுதுபார்த்து புதிதாக புனரமைக்கும் பணிகளுக்காக வேண்டி இலங்கையிலுள்ள 'சயீடா' நிறுவனம் சுமார் 50 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் இலங்கைக்கான இணைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸியிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் சயீடா நிறுவன இணைப்பாளர் நௌஸர் பௌஸி பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.



இந் நிகழ்வில் பேருவளை வலய கல்விப் பணிப்பாளர் உட்பட பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் தஹ்லான் மன்ஸூர், சமூக சேவையாளர் அல்ஹாஜ் இஷாக் மொஹமட் ஹஸன் உட்பட பாடசாலை மாணவர்கள், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# 25ஆவது தேசிய கொடகே விழா இம்மாதம் 15இல்

25வது தேசிய கொடகே விழா 2023 எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு, கொழும்பு7இல், அமைந்துள்ள தேசிய நூலக சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் கொடகே தேசிய ஆக்க இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இதன்போது இடம்பெறவுள்ளது.

# நீர்கொழும்பில் கன மழை; இடிந்து விழுந்தது கட்டம்

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

நீர்கொழும்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (6) மாலை 3.00 மணி முதல் பெய்த கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வீதிப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன. மேலும் கனமழை காரணமாக நீர்கொழும்பு, சிலாபம் பிரதான வீதியில் பெரியமுல்ல பிரதேசத்தில் பழைய கட்டடமொன்றும் இடிந்து விழுந்தது. சன நெரிசல் மிகுந்த குறித்த பிரதேசத்தில் பொதுமக்களுக்கு எதுவிதமான உயிர் ஆபத்துகளும் இதனால் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப் படுகின்றது.



# வெலிகம அறபாவில் ஆசிரியர் தின நிகழ்வு

**வெலிகம தினகரன் நிருபர்**



வெலிகம அறபா தேசிய பாடசாலையில் கடந்த வாரம் ஆசிரியர் தின மற்றும் சேவை நலன் பாராட்டு வைபவங்கள் கல்லூரி அதிபர் எம்.டி.எம் முதஹ்ஹர் தலைமையில் வெபா மண்டபத்தில் மிக சிறப்பாக நடைபெற்றன.

ஆசிரியர் தின வைபவத்தில் மாணவர்களது கலை, கலாசார நிகழ்ச்சிகளும் குறிப்பாக ஆசிரியர்களது நாடகங்களும் அரங்கேறின. மாணவர்களால் ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.மேலும் பாடசாலையில் நீண்ட காலம் கற்பித்து ஓய்வு பெற்று மற்றும் இடம் மாற்றம் பெற்றுச் சென்ற 10 ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கும் நினைவுச் சின்னங்களும் இதன்போது வழங்கி பாராட்டப்பட்டனர்.

# போதை மாத்திரையுடன் பெண்ணொருவர் மொறட்டுவையில் கைது

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

போதை மாத்திரை வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் பெண் ஒருவரை மொறடுவ பொலிஸார் கைது செய்துள்ளனர். மொறடுவ பொலிஸ் பிரிவில் மொரடுவெல்ல பகுதியைச் சேர்ந்த ஐம்பது வயது பெண் ஒருவரே இவ்வாறு போதை மாத்திரையுடன் கைதாகியுள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபரான பெண், அடையாளம் காணப்படாத இருபத்தெட்டு போதை கெப்சூல்களுடன் பொலிசாரிடம் சிக்கியுள்ளார். மேலதிக விசாரணைகளை மொறட்வ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# NSBயின் மெகா உண்டியல் அறிமுகம்

NSBயின் மெகா உண்டியல் NSB தலைமை அலுவலக வளாகத்தில், NSB இன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஹர்ஷ கப்ரால் மற்றும் பணிப்பாளர் சபையின் அனுசரணையில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவால் சம்பிரதாயபூர்வமாக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சக CBSL அதிகாரிகள், CBSL இன் உதவி ஆளுநர். A. A. M. தாசிம், பொது முகாமையாளர் / CEO அஜித் பீரிஸ், சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள், பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் NSB இன் இதர அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




ஒக்டோபர் 31ஆம் திகதி உலக சிக்கன தினத்தை கொண்டாடும் வகையில், ஒக்டோபர் மாதம் முழுவதும் சிக்கனத்தை மக்கள் கடைப்பிடிக்கும் வகையில் NSB நீண்ட காலமாக முன்னோடியாக இருந்து வருகிறது மற்றும் அதன் நாட்காட்டியில் சிக்கன மாதம் என்று பெயரிட்டுள்ளது.

பழங்காலத்திலிருந்தே சேமிப்பு என்பது சிக்கனம் மற்றும் சிக்கனத்தின் மூலம் செல்வத்தை குவிப்பது என்பதைக் குறிக்கிறது. இரண்டு மதிப்புகளும் தேசிய சேமிப்பு வங்கியின் வழிகாட்டும் கொள்கைகளாகும்.

நாட்டின் நிலவும் பொருளாதார சூழ்நிலையில், NSB ஆனது, பரந்த அளவில் உள்நாட்டு சேமிப்புகளை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்க விரும்புகிறது.

## தபால் அலுவலகங்கள்...

நள்ளிரவு 12 மணி வரை மேற்கொள்ளவுள்ள 48 மணி நேர அடையாள வேலை நிறுத்தம் தொடர்பாக நேற்று போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மற்றும் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருடன் கலந்துரையாடியதாக தபால் மாஅதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ. எம்.ஆர்.பி. சத்குமார தெரிவித்துள்ளார். தபால் அலுவலகங்கள் எதுவும் மூடப்படாதெனவும் நுவரெலிய அலுவலக கட்டடம் அரச கொள்கைக்கமைய மிகவும் திறன் வாய்ந்த முதலீட்டுச் சந்தர்ப்பத்துக்காக வழங்கப்படவுள்ளது.

## அரச ஊழியர்களைப் போன்று...

திட்டத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டாமென மக்களைக் கேட்டுக் கொள்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (07) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, "பதினாறு இலட்சம் பேருக்கும் அதிகமாக உள்ள அரச பொறிமுறையை வரவு செலவுத் திட்டத்துடன் பொருத்துவதானால்,வங்குரோத்தான நாட்டின் எதிர்கால இலக்குகளை எவ்வாறு அடைவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக 2019 ஆம் ஆண்டில் நமது ஆட்சி மாற்றப்பட்ட பிறகு பொருளாதார நெருக்கடி உருவாகியது. அக்காலத்தில் வரிக் கொள்கை மாற்றப்பட்டது. குறிப்பாக தனிநபர் வருமான வரி குறைக்கப்பட்டது. அதேபோன்று, தொடர்ந்தும் அதிகளவில் காணப்பட்ட வரித் தொகைகளை நீக்கி, வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. இந்த வரிச் சலுகைகள் காரணமாக இந்த நாடு வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இறுதியாக 2022 ஆம் ஆண்டாகும் போது மத்திய வங்கி பணத்தை அச்சிட்டு சம்பளம் வழங்கும் நிலை தோன்றியது. இந்நிலையுடன், நாம் ஒரு விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும்.நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போதுதான்,அரசாங்கம் வீழ்ச்சி அடைகிறது . ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீழ்ச்சி அடைந்த நாட்டைப் பொறுப்பேற்று அதனை மீட்டெடுத்துள்ளார் என்றார்.

## புதிய முதலீடு, ஏற்றுமதி ஊக்குவிப்புக்கு...

அபிவிருத்திக்கு மிகவும் நட்பு நேயமான சூழலை உருவாக்க, வலுவான பொறிமுறை இருக்கவேண்டியதன் அவசியம் கருத்திலெடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய,முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையை ஒருங்கிணைத்து புதிய நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு 2023.01.16 இல், இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதனால், இப்பணிகளுக்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்ளும் வகையில், இத் துறைகளில் நிபுணத்துவமுள்ளவர்களை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுவொன்று ஜனாதிபதி செயலகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து புதிய நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான முன்மொழிவை சமர்ப்பித்துள்ளது. இம்முன்மொழிவுகளுக்கு ஏற்ப புதிய முதலீடுகள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இதற்காக, ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நுண்கடன் ஒழுங்குபடுத்தல்...

நுண்கடன்களால் சமூகத்தில் தற்கொலைகள், முரண்பாடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளால் சுமார் 30 இலட்சம் பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள் இயங்குகின்ற போதும், 05 நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களே முறையற்ற வகையில் செயற்படுகின்றன. நிதி நிறுவனங்களை பதிவு செய்வதை கட்டாயப்படுத்தும் சட்டமூலம் எதிர்வரும் மாதமளவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## வர்த்தமானிக்கு தடை...

நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, அமைச்சின் செயலாளர், புதிய இடைக்கால குழு உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதிகளான எஸ். ஐ.இமாம், ரோஹினி மாரசிங்க, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஜரங்கனி பெரேரா, முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க, எச். கே. உபாலி தர்மதாச, சட்டத்தரணி ரக்கித நிர்மல ராஜபக்ஷ, எம். எச். ஜமால்டீன் மற்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையினர் இங்கு பிரதிவாதிகளாக உள்ளனர். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி விக்கும் ஏ. களுஆராச்சி முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அங்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

இலங்கை கிரிக்கெட்டை அரசியல் தலையீடுகள் மற்றும் செல்வாக்கின்றி நடத்த வேண்டுமென சர்வதேச கிரிக்கெட் பேரவை ஏற்கனவே அறிவித்திருந்ததாக மனுதாரர் சார்பில், நீதிமன்றத்தில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தெரிவித்தார். இருந்த போதிலும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து, அதன் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட வர்த்தமானியை வெளியிட்டு, விளையாட்டுத்துறை அமைச்சர் இலங்கை நிறுவனத்தின் பதிவை இடைநிறுத்தியதாக ஜனாதிபதியின் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

அது தொடர்பான நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் ஏழு பேர் கொண்ட இடைக்காலக் குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் விளையாட்டுத்துறை அமைச்சர் இதற்கான வர்த்தமானி அறிவித்தலை தமிழில் வெளியிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மாத்திரமே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் முரண்பட்டதாகவும் வேறுபட்டதாகவும் உள்ளதாக விடயங்களை சமர்ப்பித்தார்.

1973 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு உள்ள அதிகாரத்தின்படி ஊழல், முறைகேடுகள், மற்றும் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றாமை குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால், இலங்கை கிரிக்கெட் சபையின் பதிவை இடைநிறுத்துவதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

## கச்சத்தீவை இந்தியாவுக்கு...

அனுமதிக்கக்கூடாதென்பதே, தமது நிலைப்பாடு என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி எம், பி நிராஷேன் பெரேரா உரையாற்றும் போது எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிராஷேன் பெரேரா எம். பி. தமதுரையில் தெரிவித்ததாவத:

இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பிற்குள் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு சென்ற போது தெரிவித்துள்ள கருத்துக்களில் கச்சதீவையும் வடக்குக் கடலையும் இந்தியாவுக்கு வழங்கிவிட்டார்களா என்ற சந்தேகமே எழுகின்றது.

இது தொடர்பில் வடக்கு கடற்றொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## நுவரெலியா தபால் அலுவலகத்தை...

மக்களின் வருமானம் அதிகரித்து வேலை வாய்ப்புகள் உருவாகும். இது சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கும் முக்கியமாக அமையும் என்றும் அமைச்சர் கூறினார். .

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (07) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஷங்ரிலா ஹோட்டலை நிர்மாணிப்பதற்காக கல்லுமுத்தூர காணியை தனியாருக்கு விற்பனை செய்ததன் பின்னர், எந்தவொரு காணியையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதில்லையென்று அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. ஆனால், அரசு எந்த நிலத்தையும் வரியின் அடிப்படையில் திட்டங்களுக்கு வழங்குகிறது. பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், புறக்கோட்டை,கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பெந்தோட்டை, ஹிக்கடுவ, அனுராதபுரம் போன்ற ரயில் நிலையங்களுக்கருகில் ரயில்வே நகரத்தை (ஸ்டேஷன் பிளாசா) நிர்மாணிப்பதற்கான யோசனையை முதலீட்டாளர்கள் முன்வைத்தால் அது,அமைச்சரவையில் முன்வைக்கப்படும்.

## உணவு விடுதியிலிருந்து மோடிக்கு...

இதனை கூறியுள்ளார். 1983 1987 காலப்பகுதியில் இலங்கையின் தமிழ் கிளர்ச்சிக் குழுக்களும், கட்சிகளும் புதுடெல்லி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இந்திய தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்ததையும் இதன்போது, அவர் நினைவு கூர்ந்தார். 1983 மற்றும் 1990 க்கு இடையில் உரிய விடயங்களை செய்ய முடியாது போனாலும், தமிழர் பிரச்சினையில் இந்திய அரசாங்கத்துக்கும் பொறுப்புள்ளது.

இலங்கை தமிழர் தீர்வு விடயத்தில் இந்திய அரசாங்கம், தனித்து செயல்பட முடியாது. இதற்கு இந்திய மக்கள் மற்றும் தலைவர்களின் ஆதரவும் தேவை. அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வுக்காக இந்தியாவுக்குள் குரல் கொடுக்க வேண்டும். புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது சாத்தியமாகும்.இதன்,முதன்மைப் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை,13 ஆவது திருத்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இவ்விடயத்தை ஆய்வு செய்ய இந்திய அரசாங்கம் சட்ட வல்லுநர்கள் குழுவை அமைக்க வேண்டும். அத்துடன் திருத்தத்தின் 'சரியான செயல்படுத்தலை' எவ்வாறு உறுதிப்படுத்துவது பற்றி இலங்கைக்கு தெரிவிக்க வேண்டும் என்றார்.

## ஊவாவில் அதிபர்...

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சன தெனிப்பிட்டிய, மாகாண பிரதான செயலாளர் திருமதி. தமயந்தி பரணகம உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## அமெரிக்க DFC உயரதிகாரி...

கூட்டுத்தாபனத்தின் முக்கிய உட்கட்டமைப்பு முதலீட்டுக்கான ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவதற்கே, ஸ்கொட் நேதன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார். தெற்காசிய பிராந்தியத்திற்காக பிரஜைகள் அபிவிருத்தி வர்த்தக நிதியத்துக்கான (CDB) அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (DFC) முதலீட்டு உறுதிப்பாட்டுக்காக ஒப்பந்த கைச்சாத்திடும் நிகழ்விலும் ஸ்கொட் நேதன் கலந்துகொள்ளவுள்ளார்.

## உயர் நீதிமன்றத்தில் தாக்கல்...

வழமையாக இடம்பெறும் சபாநாயகர் அறிவிப்பின்போது சபாநாயகரின் சார்பில் பிரதி சபாநாயகர் இதனை சபைக்கு அறிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "பெறுமதி சேர் வரி (திருத்தம்)" எனும் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நீதிமன்றம் நீக்கிக் கொள்கிறது.

மனுதாரர்கள் முன் வைத்துள்ள கோரிக்கைக்கு இணங்க மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக வும் உயர்நீதிமன்றம் தனக்கு அறிவுத்துள்ளதாக சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

## நேர்முகப் பரீட்சைகள் நடத்தாமல்...

கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சையில் தோற்றுபவர்களின் புள்ளிகளை அடிப்படையாக வைத்தே நேர்முகப் பரீட்சைக்கு உரியவர்கள் அழைக்கப்படுகின்றனர். நேர்முகப் பரீட்சையின் போது தகைமையானவர்களாக காணப்படுபவர்களுக்கு மட்டுமே ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில்,மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, கல்வி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜயந்த சமரவீர எம்பி தமது கேள்வியின் போது:

மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாகாண அரச சேவை ஆணைக்குழு மூலம் கடந்த ஒக்டோபர் 29 இல், பட்டதாரிகளுக்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

இன்னும் அந்த பரீட்சையின் பெறுபேறுகள் கூட வெளியிடப்படவில்லை. இந்நிலையில் அந்த பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு நியமனம் வழங்கி, வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் வெளியான பின்னர், நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டே நியமனங்கள் வழங்கப்படுவது வழமை. எனினும், பரீட்சை நடத்தப்பட்டு 09 நாட்களே கடந்துள்ளது. இந்நிலையில் பெறுபேறுகள் கூட வெளியாகவில்லை. இந்நிலையிலே நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இது பெரும் அநீதியான செயலாகும்.

இது தொடர்பில் கல்வி அமைச்சு எடுக்கும் நடவடிக்கை என்ன என்றும் அவர் தமது கேள்வியில் வினவினார்.

இதற்கு பதிலளிக்கும் போதே கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

## தவறவிட்ட பணம், பொருட்களை...

இந்த பணப் பையின் உரிமையாளர் முச்சக்கரவண்டியில் பயணித்ததாகவும், அவர் தனது பையை மறந்துவிட்டு இறங்கியதாகவும் தெரியவந்துள்ளது. கைப்பையின் உரிமையாளர் இப்லோகம மஹமிகஸ்வெவ பிரதேசத்தில் வசிக்கும் எஸ். தயாவதி என்ற 53 வயது பெண், என தெரியவந்துள்ளது.

முச்சக்கரவண்டி சாரதி, கெக்கிராவ பொலிஸாரின் உதவியுடன் கைப்பையை உரிமையாளரிடம் மீள வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

## 30 அடி பள்ளத்தில் விழுந்து...

வட்டவளை பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் லொறியை வீதியோரத்தில் நேற்று (07) காலை 6.00 மணியளவில் நிறுத்தச் சென்றபோது வட்டவளை சிங்கள கல்லூரிக்கருகில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் லொறியின் சாரதி படுகாயமடைந்து வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி விபத்துக்குள்ளானபோது, லொறியில் மூன்று பேர் பயணித்துள்ளனர். விபத்து காரணமாக லொறிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தினகரன் றிம்ஸானின் மாமனார் காலமானார்

பேருவளை சமட் மாவத்தையைச் சேர்ந்த மௌலவி எம்.ஐ.எம். நியாஸ் (வயது 62) நேற்று பிற்பகல் சமட் மாவத்தை இல்லத்தில் காலமானார். பாணந்துறை தீனிய்யா மத்ரஸாவின் உஸ்தாத்தாக சிறிதுகாலம் கடமையாற்றிய அன்னார், லேக்ஹவுஸ் தினகரன் பத்திரிகையில் எழுதுவினைஞராக பணியாற்றும் மொஹமட் றிம்ஸானின் (மனைவியின் தகப்பன்) மாமனாரும் ஆவார். நான்கு பிள்ளைகளின் தந்தையான அன்னாரின் ஜனாஸா இன்று (08) மு.ப 11.00 மணிக்கு மொல்லியமலை ஹிழ்ரிய்யா ஜும்ஆப்பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்படும். அன்னாரின் மறைவு குறித்து பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி அனுதாபச்செய்தியொன்றையும் வெளியிட்டுள்ளார்.

# இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)



**மேஷம்:**
புனித பயணங்களால் விரையங்கள் ஏற்படும். கைகூடுவது போல் இருந்த கல்யாண முயற்சி கடைசி நேரத்தில் கைநழுவி செல்லலாம்.



**ரிஷபம்:**
உத்தியோகத்தை பொருத்தவரை பாதிப்பு ஏற்படாது. உங்களுக்கு இடையூறு செய்தவர்கள் விலகுவர். மேலதிகாரிகள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.



**மிதுனம்:**
உடலில் தெம்பும் உற்சாகமும் குறையும். திடீர் திடீரென வரும் விரயங்கள் மனதை வாட வைக்கும். செய்யும் முயற்சிகளில் பலன் கிடைப்பது அரிது.



**கடகம்:**
பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் அரிய பல காரியங்களை செய்து முடிப்பீர்கள். கட்டிய வீட்டை பழுது பார்ப்பதிலும் கவனம் செலுத்துவீர்கள்.



**சிம்மம்:**
புதிய யுக்திகளை கையாண்டு வெற்றி பெறும் சூழ்நிலை உண்டு. உடன்பிறப்புக்களின் குணத்தில் மாற்றம் ஏற்படலாம். வழக்குகளில் திடீர் திருப்பங்கள் வரலாம்.



**கன்னி:**
குடும்ப ஒற்றுமை குறையலாம் வாக்குவாதங்களை தவிர்க்கவும். பிள்ளைகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம்தான்.



**துலாம்:**
என்றைக்கோ வாங்கி போட்ட இடம் பல மடங்கு விலை உயர்ந்து விற்பனையாகி மகிழ்ச்சியை தரும். குறுக்கீடு சக்திகள் அகலும். கொடுக்கல் வாங்கல்கள் சரள நிலைக்கு வரும்.



**விருச்சிகம்:**
வாழ்க்கைத் துணை வலியே கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. உத்தியோகம் தொடர்பாக வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகள் ஆச்சரியப்பட வைக்கும்.



**தனுசு:**
உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை மேலதிகாரிகள் ஏற்றுக் கொள்வர். வீடு வாகனம் வாங்க கடன் உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும்.



**மகரம்:**
தொழிலில் கூட்டாளிகளுடன் பிரச்சினைகள் உருவாகலாம். பூர்வீக சொத்து பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். மனப்பயம் அதிகரிக்கும்.



**கும்பம்:**
வாகன பழுதுகளின் காரணமாக வாட்டம் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள இயலாமல் போகலாம். கவனம் தேவைப்படும் நேரமிது.



**மீனம்:**
பயணங்கள் பலன் தரும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர்.



## சிறுவர்களின் மயானமாக...

தினந்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் கொல்லப்படுகின்றனர். உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கு இரு தரப்பினரும் இணங்க வேண்டுமென அவர் அறிவுறுத்தியுள்ளார். காசா போர் ஆரம்பித்து ஒரு மாதத்தை எட்டியுள்ளது. இதையடுத்து, இஸ்ரேல் நடத்தியுள்ள தாக்குதலில் இதுவரையில், 10 ஆயிரத்து 22 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஹமாஸ் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அண்மைய புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 04 ஆயிரத்து 104 சிறுவர்களும் அடங்குவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 04 அரச களஞ்சியசாலைகளிலிருந்து...

மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றுள்ளன. சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொடவிடம் இது குறித்த விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, பணிப்புரை விடுத்திருந்தார்.

விசாரணை அறிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை (07) விவசாய அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.இதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நால்வர் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு பிரஜைகள்...

செய்தனர். கைதானவர்கள் 41, 37 மற்றும் 19 வயதுடையவர்களாவர். இவர்கள், நேபாளத்தின் காத்மாண்டுவிலிருந்து வருகை விசா மூலம் இலங்கை வந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் மூலம் ஹைதராபாத் செல்வதற்காக,இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளனர்.

இதனையடுத்து, இவர்கள் சமர்ப்பித்த விசாக்கள் மற்றும் பிற ஆவணங்கள் தொடர்பில் சந்தேகம் கொண்ட விமான நிலைய அதிகாரிகள், குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லை பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளிடம் அவற்றை சமர்ப்பித்துள்ளனர். அங்கு முன்னெடுக்கப்பட்ட தொழில்நுட்ப சோதனையில், இந்த மலேசிய விசாக்கள் போலியானவையென உறுதி செய்யப்பட்டது.

## தனிப் பெரும்பான்மையுடன்...

இருப்பினும், 3, 5, 7, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23 ஆகிய பல பிரிவுகள் தொடர்பாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்குட்பட்டு , 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 36, 37, 42, 45, 53 மற்றும் 56 ஆகிய பிரிவுகள் பாராளுமன்றக் குழுவின் போது திருத்தப்பட்டால், பாராளுமன்றத்தின் எளிய பெரும்பான்மையால். இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும்.

அதன்படி, மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு உட்பட்டு, இந்த சட்டமூலம் அல்லது அதன் விதிகள் எதுவும் அரசியலமைப்புக்கு முரணாக இல்லை என்று உயர் நீதிமன்றம் கருத்து தெரிவிக்கிறது.

இதன்படி, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்குட்பட்டு, பாராளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியுமென்றும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# சீனன்கோட்டையில் மீலாத் விழா









பேருவளை சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத்தின் 42 வது வருட மீலாது விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் (4) அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம். ஜாபீர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றுள்ளதை படங்களில் காணலாம்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board

திங்கள் 2023.11.06 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** சீட்டிழுப்பு இலக்கம் 5290 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,164,224.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 4 2 4 6 6 9

**கொவிசெத** சீட்டிழுப்பு இலக்கம் 3532 சீட்டிழுப்பு திகதி 2023.11.06 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,924,324.40
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 11 57 65 71 விசேட எழுத்து E இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 47091

**Mega Power** சீட்டிழுப்பு இலக்கம் 1638 2023.11.06 52564 அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 413,467,696.00
ஆங்கில எழுத்து W சுப்பர் இலக்கம் 09 வெற்றி இலக்கங்கள் 14 34 59 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7** திகதி 2023.11.06 சீட்டிழுப்பு இலக்கம் 0116
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 6 3 9 2 0 3
L7 இலக்கம் 2 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 12,294,431.36

**ராசி சுப பலன்** திகதி 2023.11.06 சீட்டிழுப்பு இலக்கம் 599 அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 02 40 41 47 தனயோக இலக்கம் 39326 நாளுக்கான விதி எண் 24

**தன நிதானய** சீட்டிழுப்பு இலக்கம் 1320 2023.11.06 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 119,031,218.40
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 16 25 50 80 விசேட எழுத்து F இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 36482



## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.08.2023 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் தேதிகளில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 15-11-2023 | சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் நகரக் கிளை, மன்னார், பருத்தித்துறை, திருநெல்வேலி, குருமன்காடு, முழங்காவில்,வவுனியா | 94, KKS சாலை, யாழ்ப்பாணம். |
| 23-11-2023 | அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை, பதுளை, மட்டக்களப்பு, சிலாபம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா, கம்பளை, கணேமுல்ல, ஹட்டன், ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஜா-எல, கடவத்தை, கதுருவெல, கல்பிட்டிய, களுத்துறை, களுவாஞ்சிக்குடி, கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருநாகல், மஹரகம, மஹியங்கனை, மாலபே, மாத்தறை, மதவாச்சி, மொனராகலை, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பூகொட, புதுக்குடியிருப்பு, புத்தளம், ராகலை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, தலவாக்கலை, திருகோணமலை, திருகோணமலை-2, உடப்புவ, வார்டு இடம், வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ, கிரிந்திவெல,மாத்தளை,நாவலப்பிட்டி,பலாங்கொடை, பொரளை சூப்பர் கிளை,ஹொரணை, கடுவெல | 722, கோட்டே வீதி, ராஜகிரிய. |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோ.பி.எல்.சி க்கு எந்த வித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600



## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)
## மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA)

### காற்றுத் தர தரவின் ஒருங்கிணைத்தல் மற்றும் பரப்புதலுக்கான தேசிய தளத்தின் மேம்பாட்டுக்கு ஆலோசகரின் தேர்வுக்கான முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)

இலங்கைக்குள் காற்றுத் தரத்தை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை பொறுப்பாக உள்ளது. மூன்று காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்கள் (அமைப்புகள்) மற்றும் ஏனைய தொடர்புடைய மூலங்களில் இருந்து தரவுகளை இணைக்கும் விரிவான மென்பொருள் மற்றும் வன்பொருள் தீர்வு ஒன்றை மேம்படுத்துவதற்கு தகுதியுடைய மற்றும் அனுபவம் பெற்ற ஆலோசகர் ஒருவரை நாம் தேடுகிறோம். தரவுகளை சேகரித்தல் மற்றும் சேமித்தல் மற்றும் சுற்றுச்சூழல் தீர்மானங்களை எடுக்க உதவியாக விரிவான உருவாக்கலுக்கு மதிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகளை செய்தல் மற்றும் கொள்கை உருவாக்கம் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வுக்கு இந்த மென்பொருள் பயன்படுத்தப்படும்.

மேலுள்ள ஆலோசகர் சேவைக்காக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதி முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு தகுதிபெற்ற அபேட்சர்களிடம் இருந்து CEA கோரிக்கை விடுக்கிறது. விண்ணப்பங்களை பணிப்பாளர் (நிர்வாகம்), மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பத்தரமுல்லை என்ற முகவரியில் இருந்து பெறலாம். தொடர்புடைய ஆவணங்களுடன் சேர்த்து முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுக்கான கோரிக்கையை (RFP) 2023.11.28 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம்), மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "காற்றுத் தர தரவின் ஒருங்கிணைத்தல் மற்றும் பரப்புதலுக்கான தேசிய தளத்தின் மேம்பாட்டுக்கு ஆலோசகரின் தேர்வுக்கான முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட பெறுகையின் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 01ஆவது மாடியில் உள்ள மாநாட்டு அறையில் 2023.11.16 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.

மேலுள்ள ஆலோசனை சேவைக்கான குறிப்பு விதிகள் (TOR) மற்றும் ஏனைய ஆவணங்களை www.cea.lk என்ற முகவரியில் பார்க்க முடியும். ஆலோசனை வழிகாட்டல்களில் உள்ள தர அடிப்படை தேர்வுக்கு (QBS) அமைவாக ஆலோசகர் ஒருவர் தேர்வு செய்யப்படுவார்.

கிடைக்கப்பெற்ற எந்த ஒரு விண்ணப்பத்தையும் முழுமையாக அல்லது பகுதி அளவில் ஏற்பது அல்லது நிராகரிக்கும் முழு உரிமை திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPDC) வசமானது என்பதோடு இது தொடர்பில் திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழுவின் (CPDC) முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு** (CPDC),
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை,**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**
**தொ.: 0112873447, 0112873448**
**தொலைநகல்: 0112872601**
**www.cea.lk**
2023.11.08


## தமிழ் மொழித்தினப்போட்டியில்
# பனாவிடிய முஸ்லிம் வித்., மாணவி 2ஆம் இடம்



***(புத்தளம் தினகரன் நிருபர்)***

*அகில இலங்கை தமிழ் மொழித்தின தேசிய மட்ட போட்டியில் கிரியுல்ல கல்வி வலயத்தைச் சேர்ந்த பனாவிடிய முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து பங்குபற்றிய என். மர்யம் என்ற மாணவி இரண்டாம் பிரிவு பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.*

*பாடசாலையின் வரலாற்றில் முதன் முறையாக தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இம்மாணவி, எஸ். நௌபர் மற்றும் என். நஸ்ரினா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.*

*மாணவிக்கு பயிற்சி வழங்கிய ஆசிரியை எம்.என்.எப். நிஸ்லா, பாடசாலை அதிபர் எம்.வை.எம். முஸம்மில் ஆகியோரும் வெற்றி பெற்ற மாணவிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*


## பெயர் மாற்றம் - அறிவிப்பு

தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகளின் அடிப்படையில், (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டம் இல. 1980 இல் 31 திருத்தப்பட்டது. சட்டம் இல.1988 ஆம் ஆண்டின் 8 இன் பிரகாரம் அரச சார்பற்ற அமைப்பின் பெயர் பின்வருவன மாறுவது தொடர்பான அறிவிப்பை வழங்குகிறது.

**அரச சார்பற்ற நிறுவனத்தின் முன்னைய பெயர்:**
தார் கலிஃபா லில் அய்தம் (உத்தரவாதம்) லிமிடெட்.

**நிறுவனத்தின் புதிய பெயர்:**
ஓர்பன் கேர் ஃபவுண்டேஷன் ஆஃப் லங்கா

பதிவு இல. L-182504

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:**
இல. 1, துருக்கி சிட்டி, தாராபுரம், மன்னார்



## இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (SLSEA)
## விலைமனுக்களுக்கான அழைத்தல்
### Supply, Installation and Maintenance of ERP Operational and Accounting Software.
### Procurement Number: SEA/PD/F/31-2023

1. ERP Operational and Accounting Software இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரலின் கீழ் பொருத்தமான சேவை வழங்குநர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் www.energy.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையதளத்தில் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணத்தை பரீட்சிக்கலாமென்பதுடன் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியை மேலேயுள்ள இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 1,000 இலங்கை ரூபாவை இநிசஅ இடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும் அல்லது SEA/PD/F/31-2023 என்ற தொடர்புடைய இலக்கத்தை தெளிவாக குறிப்பிட்டு இலங்கை வங்கி Code is 7010) டொரிங்டன் சதுக்க கிளையின் (Code is 453) (SWIFT Code is BCEYLKLX) பொதுவான வங்கி இலக்கமான 0074944408 என்பதற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டின் பிரதியில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்கள் 2024 பெப்ருவரி 25 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டவாறு விலைமனுவானது 120,000 இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. 2023 நவம்பர் 28 ஆம் திகதியன்று இலங்கை நேரம் மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் (GMT + 5:30 Time Zone) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'SEA/PD/F/31-2023' என அடையாளமிடப்பட்டு பெறுகைப் பிரிவு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில்/ தூதஞ்சல்/ நேரடி ஒப்படைத்தலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் இநிசஅ இன் சபை அறையில் விரைவாகவே திறக்கப்படும்.
5. இநிசஅ இன் சபை அறையில் 2023 நவம்பர் 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.
6. 5 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிட்டுள்ள கேள்வியில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களும் ஒப்பந்த முழுமையான காலத்திலும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், கேள்விதாரருக்கு முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது கேள்விதாரருக்கு பெயர் குறிப்பிடப்பட்டவராக அல்லது சார்பாக செயற்படுவதற்கு விரும்பும் கேள்விதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்யும்படி தேவைப்படுத்தப்படுவதுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 0112575203 நீடிப்பு 226/278 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07, இலங்கை.**
**தொலைபேசி: 94(0) 112575030. தொலைநகல்: 94(0) 112575089**
**மின்னஞ்சல்: procurement.slsea@gmail.com**
**இணையம்: www.energy.gov.lk**
2023 நவம்பர் 08 ஆம் திகதியன்று.



## ஹக்மன பிரதேச சபை
# வழங்குநர்களை பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்கள், நிர்மாணங்கள், வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பதிவு செய்து கொள்ள ஆர்வங்காட்டும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்**
1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2023-12-31ஆம் திகதிக்கு முன்னர் அட்டவணையில் குறிப்பிட்டப்படும் உருப்படிகளுக்கு 3500.00 ரூபா ரொக்கப் பணம் அல்லது காசுக் கட்டளையுடன் பதிவுக்கட்டணம், அட்டவணை 2ல் குறிப்பிடப்படும் உருப்படிகளுக்கு ரூபா 2000.000 பதிவுக்கட்டணமும் அனுப்பப்படுதல் வேண்டும்.
2. ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் வியாபார பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்ப வேண்டும்.
3. நிபந்தனைகளை மீறும் நிறுவனங்கள், முன்னறிவித்தல்கள் ஏதுமின்றி பட்டியலில் இருந்து நீக்கப்படும்.
4. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அனைத்து விபரங்களையும், தேவையான சான்றிதழ்களின் பிரதிகளுடன் செயலாளர், ஹக்மன பிரதேச சபை, ஹக்மன என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
5. விலைகளைப் பொதுவாக 06 மாத காலத்தினுள் மாற்றம் செய்யாது நிலையாக வைத்திருக்க வேண்டும்.
6. பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைகள் கோரப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதற்குப் புறம்பாகவும் விலைகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**அட்டவணை - 01**
1. அலுவலக உபகரணங்கள் (தட்டச்சுப்பொறி/ புகைப்படப் பிரதி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்)
2. காகிதாதிகள்
3. மரத்தளபாடங்கள், உருக்கு வீட்டுத் தளபாடங்கள்
4. அச்சு வேலைகள்
5. கட்டிட நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
6. விளையாட்டுத்துறைப் பொருட்கள் மற்றும் சனசமூக நிலைய உபகரணங்கள்
7. பாலர் பாடசாலை உபகரணங்கள்
8. சீருடைத்துணி மற்றும் ஏனைய துணி வகைகள்/ சப்பாத்து
9. கணனி இயந்திரம், ரோனியோ இயந்திரம் கொள்வனவு செய்தல், திருத்தவேலைகள் மற்றும் துணையுறுப்புகளை வழங்குதல்
10. கொங்கிறீட் வரம்புக் கற்கள் (ஹியூம் குழாய்கள்) வழங்குதல்
11. வாகன உதிரிப்பாகங்கள் டயர் மற்றும் டியூப்களை வழங்குதல்
12. நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்
13. வீதி விளக்கு, வீதி விளக்கு உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய மின் உபகரணங்களும் கருவிகளும்
14. நீர்க்குழாய் துணையுறுப்புகள் நீர்மானி மற்றும் நீர் விநியோக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
15. தகனசாலைக்காக 37.5 கிலோகிராம் கொள்ளளவையுடைய கேஸ் சிலிண்டர்களை வழங்குதல்.
16. காணி அளக்கும் வேலைகள்
17. வாகன திருத்தவேலைகள்
18. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்
19. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
20. நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள்
21. கணனி இயந்திரம் தொலைநகல் இயந்திர திருத்தவேலைகள்
22. சட்ட ஆலோசனைச் சேவைகள் வழங்கல்

**அட்டவணை - 02**
1. சகல வகையான தும்புத்தடி / விளக்குமாறு
2. சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைக்கு தேவையான உபகரணங்கள்.
3. அறிவித்தல் பலகை மற்றும் பதாகை வரைதல்
4. நிர்மாண வேலைகளுக்கான இயந்திராதிகள் வழங்குதல்
5. பழைய பத்திரிக்கை மற்றும் கழிக்கப்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்தல்.
6. பட்டறை வேலைகள்
7. நநறுவன அடையாள அட்டை
8. மரம் வெட்டுபவர்கள்

**2023.11.03**

**ர.எம்.கே.நாலிக அபேகோன்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, ஹக்மன**

# ஏறாவூர் ஹைறாத் மகளிர் கலாபீடத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா





ஏறாவூர் ஹைறாத் மகளிர் இஸ்லாமிய கலாபீடத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா ஏறாவூர் ஜிப்ரி தைக்கா வீதியில் அமைந்துள்ள அல் மர்கஸுல் இஸ்லாமி ஜும்ஆப் பள்ளிவாசலில் தலைவர் எம். எச். எம். ஆரிப் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருதமுனை தாருல் ஹுதா அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைக்கான மகளிர் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி எம். எல். முபாரக் (மதனி) Phd கலந்து கொண்டு சிறப்பித்ததோடு பிரதான உரையையும் நிகழ்த்தினார்.

கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத், ஜம்இய்யதுல் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுச் செயலாளர் ஏ. எல். கலீலுர் ரஹ்மான் MA, ஏறாவூர் நகர சபையின் செயலாளர் மற்றும் விசேட ஆணையாளர் எம். எச். எம். ஹாமீம் MA, மட்டக்களப்பு மத்திய கல்வி வலயப் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் எம். யூ. எப். ரிப்கா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்பு அதிதிகளாக பறகஹதெனிய தாருத் தவ்ஹீத் அரபுக் கல்லூரியின் பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் கலாநிதி எம். ஆர். எம். அம்ஜத் ராசிக் (மதனி) Phd , ஏறாவூர் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் எம். எம். எம். முஹிதீன், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் ஏறாவூர் கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ. எல். சாஜித் ஹஸன் (பாக்கவி), ஏறாவூர் ஹைரிய்யா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் (ரஹ்மானி, ஓட்டமாவடி உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஏ. எல் பீர் முஹம்மது (காஸிமி) MA, காத்தான்குடி மஹத்துஸ் சுன்னா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம். சி. எம். ரிஸ்வான் (மதனி) ஆகிய முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் போது பிரமுகர்கள் சிறப்பு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்த பறகஹதெனிய ஜம்இய்யதுல் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுத்தலைவர் அஷ்ஷெய்க் என். பி. எம். அபூபக்கர் சித்தீக் (மதனி) சுகவீனம் காரணமாக சமுகமளிக்காமையின் காரணமாக அதன் விருதினை அதன் பொதுச் செயலாளரும் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட ஏ. எல். கலீலுர்ரஹ்மான் பெற்றுக் கொண்டார்.

ஏறாவூரில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் கலை கலாசாரத் துறையின் தலைவர் கலாநிதி அல் ஹாபிழ் எம். பீ. பௌசுல் மற்றும் நீண்ட காலமாக மார்க்கப் பிரசாரப் பணியினை மேற்கொண்ட அஷ்ஷெய்க் கனி ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

123 மாணவிகள் மௌலவியாப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் விசேட அம்சம் என்னவென்றால் மௌலவியாப் பட்டத்தைப்பெற்றுக் கொண்ட ஒருவர் இம்முறை வெளியான உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பீடம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன்போது அம்மாணவி விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் 'ஹைறாத்' எனும் பெயரில் முதலாவது பட்டமளிப்பு விழா நினைவு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வரவேற்புரையினை கல்லூரியின் பிரதி அதிபர் அஷ்ஷெய்க் எம். எல். எம். அஸ்மி (ஹாமி) நிகழ்த்தினார்.

★ **ஹைறாத் மகளிர் இஸ்லாமிய கலாபீடத்தின் அதிபர் அஷ்ஷெய்க் ஜே. எம். சியாத் தலைமையுரையில்;** எமது முதலாவது பட்டமளிப்பு விழாவில் 123 மாணவிகள் மௌலவியாப் பட்டங்களைப் பெற்று வெளியேறுவதையிட்டு நான் பேருவகையடைகின்றேன். இந்தக் கலாபீடம் எட்டு வருட கால அறுவடையை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. எமது பிரதேசத்தில் குறிப்பாக பெண்களுக்கான மார்க்கக் கல்வி காணப்படாத ஒரு கால கட்டம் இருந்தது. 1999 இல் பெண்களுக்கான மார்க்கக் கல்வி வழங்க வேண்டும், புகட்ட வேண்டும் என்ற நன்நோக்கில் உருவாக்கப்பட்டது தான் அல் ஜாமியதுல் ஹைரிய்யா மகளிர் அரபுக் கல்லூரியாகும்.

இன்றைய தினம் எமது சிறப்பு அதிதிகளுள் ஒருவராக கலந்து கொண்டுள்ள ஏறாவூர் ஹைரிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபர் ஜே. அப்துல் ஹலீம் (ரஹ்மானி) அவர்களை முதல்வராகக் கொண்டு இம்மத்ரஸா ஆரம்பிக்கப்பட்டது. சிறியளவிலான மாணவிகளையும், குறைந்தளவிலான இட வசதிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அக் கல்லூரி 2015 ஆம் ஆண்டு வரையிலும் நூற்றுக்கணக்கான ஆலிமாக்களையும் ஹாபிழாக்களையும் வெளிக்கொணர்ந்துள்ளன. இருப்பினும் அரபுக் கல்லூரிக்குரிய வளங்கள் போதாமையின் காரணமாகவும் கல்வி தொடர்பில் இன்னோரன்ன தேவைகளின் காரணமாகவும் கல்லூரியை இன்னுமோர் இடத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனை நன்கு உணர்ந்த நிர்வாகத்தினர்கள் இதற்கான வேறு ஓர் இடத்தை தெரிவு செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அந்த வகையில் எமக்கு பொருளாதார ரீதியாகவும் பல்வேறு ரீதியாகவும் பெரும் உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்ற பறகஹதெனிய ஜம்மிய்யதுல் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா இதற்கான காணியை கொள்வனவு செய்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள முன்வந்தன.

சவூதி அரேபிய நாட்டின் செல்வந்தர் ஒருவரின் ஊடாக மிகப் பெரிய நிதிப் பங்களிப்பினைப்பெற்று ஏறாவூர் சுன்னக்குடா வீதியில் அமைந்துள்ள காணியில் ஹைறாத் மகளிர் கலாபீடத்தின் புதிய கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு 2015 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது ஜாமியதுல் ஹைரிய்யாவில் ஷரிஆப் பிரிவில் கற்றுக் கொண்டிருந்த மாணவிகள் எமது கலாபீடத்திற்கும் அங்கே ஹிப்ழுப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவிகள் அக்கலாபீடத்திலும் அங்கு தொடர்ந்து நல்ல முறையில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கின்றனர்.

2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஹைறாத் மகளிர் கலாபீடம் தனது அடுத்த கட்ட முன்னெடுப்பை மேற்கொள்ளஆரம்பித்துள்ளது.போதுமானளவுவகுப்பறைகள், விடுதி வசதிகள், நூலகம், கேட்போர் கூடம் என அனைத்து வசதிகளும் இருந்தமையின் காரணமாக முழு நேரம் கலாபீடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று நிர்வாகத்தினர் தீர்மானம் எடுத்தனர். அந்த அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு முழு நேர மாணவிகளை இணைத்துக் கொண்டு பகுதி நேரம் மற்றும் முழு நேர என்ற வகையில் இன்று வரை அரபுக் கலாபீடம் தன் எழுச்சிப் பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இங்கு ஷரிஆப் பிரிவுகள், உயர்தரக் கற்கைகள், அரபு மொழிப்பாட நெறி, ஆளுமை விருத்திப் பயிற்சிகள், தலைமைத்துவ வழிகாட்டல்கள், க பொ. த உயர் தர வகுப்புக்கள் என்ற அடிப்படையில் கல்வித் திட்டங்கள் திறன்பட வகுக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் இன்று 123 ஆலிமாக்கள், மௌலவியாக்கள் வெளியேற இருக்கும்வேளையில் பகுதி நேரமாகக் கல்வி கற்று மருத்துவத் துறைக்கு ஒரு மௌலவியா தெரிவு செய்யப்பட்டுள்ளார். சட்டத்துறை, கலைத்துறை என்று முக்கியமான கல்வித்துறைகளில் சாதனைகளை நிலைநாட்டி பல்கலைக்கழக மாணவிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எமது முழு நேர மாணவிகள் நாங்கள் எடுத்த முயற்சியில் முதன் முதலாக 23 மாணவிகள் க. பொ. த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி 11 மாணவர்கள் பல்கலைக் கழகம் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களில் ஆறு மாணவிகள் '3 ஏ' என்ற வகையில் சித்திகளைப் பெற்று இருந்தார்கள். இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு அடுத்தடுத்து வந்த வருடத்தில் எந்த விதத்திலும் சளைத்தவர்களாக இல்லாமல் சாதனைகளைப் பெற்றுக் காட்டினார்கள். உலகக் கல்வி மாத்திரமின்றி சிறந்த தூய்மையான பெண்களாகவும் சிறந்த குடும்பத் தலைவிகளாகவும் சிறந்த தாய்மார்களாகவும் சிறந்த நற்கல்வியைப் புகட்டக் கூடிய கலாபீட ஆசிரியைகளாகவும் முன்மாதிரியான வழிகாட்டிகளாகவும் அல்குர்ஆனைக் கற்றுக் கொடுக்கின்ற முஅல்லிமாக்களாகவும் இவர்களுடைய பரிணாமங்களை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம்.

ஒரு பெண் சமூகத்தின் சிறந்த சீர்திருத்தவாதி என்பதை நாம் அனைவரும் கண்டிப்பாக நன்கு உணர வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு களப்பணிகள் பெரிதாக இல்லை என்றாலும் அல்லாஹ்வுடைய உதவிக்கப்பால் அவர்களுடைய உதவிகள் இல்லாமல் எந்தவொரு நூலும் எந்தவொரு குடும்பமும் சீரிய சிறந்த வழிகாட்டலின் கீழ் கொண்டு வர முடியாது என்பதே நிதர்சனமாகும். உங்களுடைய தாய், தந்தையர்களுக்கு கண்குளிர்ச்சியாக மிளிர வேண்டும். உங்களுடைய ஆசான், இதற்காகத் தியாகம் செய்த உலமாக்கள் போன்ற அனைவருக்கும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

★ **இந்நிகழ்வில் பிரதான உரை நிகழ்த்திய கலாநிதி எம். எல். முபாரக் (மதனி);** இஸ்லாம் கல்விக்கு கொடுத்திருக்கின்ற முக்கியத்துவம் நம் எல்லோருக்கும் தெரியும். ஷிர்க்குகள், மூட நம்பிக்கைகள், அனாச்சாரங்கள் போன்ற பாவச் செயல்கள் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அல்லாஹுத்தஆலா முதன் முதலாக இறக்கிய வஹி கல்வியைப் பற்றியே. ஷிர்க் செய்ய வேண்டாம். தவ்ஹீதை நிலைநாட்டுங்கள், விபச்சாரம் செய்ய வேண்டாம் என்றெல்லாம் சொல்வதற்கு முதலில் சொல்லியது 'இக்ரஃ' என்ற சொல் முழுக்க முழுக்க கல்வியைப் பற்றியே பேசுகிறது. இஸ்லாம் கல்விக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமை என்பது பற்றி நம் எல்லோருக்குமே நன்கு தெளிவாகத் தெரிந்த விசயம்.

இந்தக் கல்வியை நபி (ஸல்) அவர்கள் போதிக்கிறார்கள். அவர்களிடமிருந்து ஸஹாபாக்கள் கற்றுக் கொண்டு அவர்கள் அடுத்த தலைமுறையினர்களுக்குப் போதிக்கிறார்கள். இப்படியாக கற்றலும் போதிப்பதும் தொடர்ச்சியாக நடந்து வந்து கொண்டிருக்கிறது. இந்தக் கல்வி முறையில் இடையில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. உலக இஸ்லாமிய கல்வி வரலாற்றில் ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி முறை இடம்பிடிக்கிறது. குறிப்பாக அப்பாஸியருடைய ஆட்சிக் காலத்தில் இந்த முறை காணப்பட்டது. அதன் பின்பு உலகத்தின் பல இடங்களுக்கும் பறந்து செல்லுகிறது. இலங்கையைப் பொறுத்த வரையில் 1870 களில் காலியில் மத்ரஸா ஆரம்பிக்கப்படுகிறது. அதற்குப் பின்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று இலங்கையில் 310 க்கும் மேற்பட்ட அரபுக் கல்லூரிகள் காணப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் ஆண்களுக்கான கல்லூரிகள் இருந்தன. பெண்களுக்கான அரபுக் கல்லூரிகள் இருக்கவில்லை. பெண்களுக்கான முதலாவது அரபுக் கல்லூரி கல் எளியவில் 1959 களில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்பு நீண்ட இடைவெளிக்குப் பிறகு அடுத்தடுத்த வந்த காலங்களில் பெண்கள் அரபுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு அண்மைக்காலமாக பெண்கள் அரபுக் கல்லூரிகளின் விகிதம் மிக வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. அரபுக் கல்லூரிகள் மட்டுமல்ல பெண்களுடைய கல்வித் துறை மிக வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

பெண்கள் மார்க்கக் கல்வியைக் கற்பதிலும் ஏனைய கல்வியைக் கற்கின்ற காலத்திலே நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். 310 அரபுக் கல்லூரிகளில் 26 விகிதம் பெண்கள் அரபுக் கல்லூரிகள் இருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. ஒரு குடும்பத்தைச் சரியான முறையில் வழிநடத்தக் கூடியவர் யாரென்றால் தாய்தான். பெண்தான். எனவே பெண்கள் மார்க்கக் கல்வியின் பால் ஆர்வத்துடன் செயற்படச் செய்வது என்பது மிகவும் முக்கியமான விடயமாகும் என்று அவர் நீண்டதொரு உரையினை நிகழ்த்தினார்.

★ **சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட அஷ்ஷெய்க் கலாநிதி எம்.ஆர்.எம். அம்ஜத் ராசிக் (மதனி) உரையாற்றுகையில்;**

கல்வி என்பது ஓர் எல்லை இல்லாத ஒன்று. அதிலும் மார்க்கக் கல்வியினைப் பொறுத்தவரையில் எமக்கு முன் சென்ற மார்க்கக் கல்விசார் அறிஞர்கள், இமாம்கள், உலமாக்கள், ஏன் தாபிஈன்கள், ஸஹாபாக்கள், ஸஹாபாப் பெண்மணிகள் ஆகிய அனைவரும் எடுத்துக் காட்டிய ஒரு கல்வி பயணத்தின் வழிமுறையாக நாங்கள் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பது தெளிவான விடயம்.

இங்கு மௌலவியாப் பட்டம் பெறும் பிள்ளைகளின் அடைவு மட்டமானது ஒரு முற்றுப்புள்ளியாக இருக்காது. அவர்கள் கல்வியை மென்மேலும் தொடர்வதற்கு பல்கலைக்கழகங்கள் செல்லலாம். அல்லது உயர் கல்வி நிறுவனங்களில், அவ்வாறு வாய்ப்பு இல்லாவிட்டால் தங்களது வீட்டில் இருந்தவாறே உயர் கல்வியினைத் தொடரக் கூடிய நிறைய வசதிகள் உள்ளன.

உயர் கல்வியைத் தொடர்வதற்கு உயர் கல்வி நிறுவனம் தான் தேவை என்று கிடையாது. ஸஹாபாப் பெண்மணிகள் வரலாற்றை எடுத்துக் கொண்டால் அவர்கள் வாசிப்பின் மூலமாகவும் மூத்த ஆலிமாக்களை அணுகி கற்றுக் கொண்டதன் வாயிலாக தங்களுடைய அறிவுப் பசியைத் தீர்த்துக் கொண்ட வரலாற்றை நாங்கள் பார்க்கின்றோம். நீங்கள் அல்குர்ஆனை நன்கு வாசிக்க முடியும். அன்றாடம் அல்குர்ஆனை ஓதி அதன் கருத்துக்களை அறிந்து கொள்ளலாம். அறிவுப் பொக்கிஷம் அது. இன்னோரன்ன மார்க்க அறிவு சார்ந்த நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. இக்கல்லூரியில் அனுமதிக்கப்படும் முன் தமிழ், ஆங்கிலம் மொழிக்குப் புறம்பாக அரபு மொழி தற்பொழுது தங்களுக்கு சரளமாக கிடைத்துள்ளது. அது ஒரு கடல். நிறைய வாசியுங்கள் நிறையப் பயன்பெறுவீர்கள்.

அதிலும் பட்டம் பெற்றவர்கள் விடும் தவறு என்னவென்றால் நாங்கள் பட்டம் பெற்று விட்டோம். நமது படிப்பு முடிந்து விட்டது என்று இருக்கக் கூடாது. சமூகத்தில் துறை சார் நிபுணர்களுடைய இடைவெளி நிறைய இருக்கின்றன. அந்த இடைவெளியை நீங்கள் நிரப்ப வேண்டும்.

நீங்கள் கற்ற கல்வி தாங்களுக்கு மாத்திரமன்றி, உங்களில் முதலில் நீங்கள் கற்ற கல்வியின் தாத்பரியத்தை கொண்டு வர வேண்டும். ஒரு மார்க்கப் பற்றுள்ள பெண்ணாகவும் அல்லாஹுத்தஆலா விரும்பக் கூடிய பெண்ணாகவும் மாற வேண்டும். உங்களுடைய சூழலில் தாய் தந்தையர்கள், கணவர் பிள்ளைகள், சகோதர்களிடத்தில் உங்களுடைய பிரசாரப் பணியை கொண்டு செல்ல வேண்டும் என்பதுதான் இந்தக் கல்வி நிறுவனரின் நோக்கமாகும். கொள்கை பண்பாடுகளுடன் சிறந்து விளங்கி பயன் தரும் மார்க்கத்தை உருவாக்கக் கூடிய ஒரு முன்மாதிரியான கல்வி நிறுவனம் இது.

ஒரு மனிதன் பிறக்கும் போது நல்லவனாகத்தான் பிறப்பான். அவன் நல்லவனாக மாறுவதும் தீயவனாக மாறுவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற தமிழ் பாடல் வரிகள் உள்ளன. ஆனால் அரபுக் கவிஞர் தனது பாடலில்; பிள்ளை வளர்ப்பதில் தந்தைக்கும் சம பங்கு உண்டு என்று கவிதையில் பாடியுள்ளார் என்பது மிக முக்கிய அம்சமாகும்.











இக்பால் அலி

# கிழக்கின் குரல்



## கல்முனை பிராந்திய பணிப்பாளர் பொத்துவில் வைத்தியசாலைக்கு விஜயம்

**(பாலமுனை விசேட, மாளிகைக் காடு குறூப் நிருபர்கள்)**



பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி (Paying ward) அமைப்பதற்கான இடங்களையும், அங்கு இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகளையும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் (06) பார்வையிட்டனர். இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.ஐ.எம். றஹிம் மற்றும் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். தற்போது பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சீன அரசின் நிதியுதவில் சகல வசதிகளையும் கொண்ட மூன்று மாடிக்கட்டடம் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, நிர்வாகப் பிரிவுகளைக் கொண்ட கட்டடத் தொகுதி போன்ற அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.



மட்டக்களப்பு கிரான் பழைய மாணவர் அமைப்பு, மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரியுடன் இணைந்து நடைமுறைப்படுத்தும் ஆளுமை விருத்திக்கான விசேட செயற்றிட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 24 கழகங்களில் மாணவர் மென்திறன் கழகம், இளம் கண்டுபிடிப்பாளர் கழகம் மற்றும் ஊடக கழகம் என்பவை கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எ. கனகசிங்கத்தினால் உத்தியோகபூர்வமாக அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (படம்: பாசிக்குடா நிருபர்)

## டெங்கு நோய் பரவும் அபாயம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

சம்மாந்துறை பிரதேசத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் நுளம்புகள் பரவக் கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒரு வார காலத்திற்குள் காணிகளை துப்புரவு செய்யுமாறு, சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம். கபீர் தெரிவித்தார்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் பருவ மழை பெய்து வருவதனால் பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுமாறும், பாடசாலைகள், மதஸ்தலங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் சிரமதான பணிகளை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்பு பரவாமல் தடுக்கும் பொருட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கொழிப்பு செயலணி மற்றும் பொலிஸார் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக விழிப்பூட்டல், துண்டுப்பிரசுரம், ஒலிபெருக்கி ஊடாக அறிவித்தல் விடுத்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் வீடுகளுக்கு வரும் போது உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்கள் துப்புரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் அவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது

## எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைகள் திறந்துவைப்பு

சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் நவீன கலையுடன் கூடிய அலங்கரிக்கப்பட்ட வகுப்புக்களை திறந்து வைக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை (08) காலை 08.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். பாடசாலையின் ஆரம்ப ஆசிரியர்கள், பெற்றோர்களின் பங்களிப்புடன் ஆரம்ப மாணவர்கள் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.மலிக் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதோடு, விசேட அதிதிகளாக, சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம், ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹாங்கிர், ஆசிரிய ஆலோசகர்களான யூ.கே. அன்சார், எம்.எம். எம்.றபீக், முன்னாள் ஆசிரிய ஆலோசகர் ஏ. சஹ்ரூன், பாடசாலையின் ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபித், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் நாஸர், பாடசாலைக்கு சகல விதத்திலும் உதவி வருகின்ற ஊடகவியலாளர்களான சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் மற்றும் செய்தியாசிரியர் பல்துறைக் கலைஞர், கலைச்சுடர் எம்.எஸ். எஸ்.ஸாகிர் உட்பட பாடசாலை ஆரம்பப் பிரிவின் வகுப்பாசிரியைகளான எம்.பி. பாயிஸா, என். எப். பைஸால், தரம் 2 வகுப்பாசிரியை கே. ஹப்ஸா, 03ஆம் ஆண்டு வகுப்பாசிரியை ஏ.எஸ். ஐனுல் சஜானா, 04ஆம் ஆண்டு வகுப்பாசிரியை எஸ்.எச். மர்சுக்னா, 05ஆம் ஆண்டு வகுப்பாசிரியை ஏ.டபிள்யூ. றினோஸியா மற்றும் ஏனைய வகுப்பு ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் வறிய, பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலைக்கு தனவந்தர்கள் முன்வந்து உதவிசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். முடியுமானவர்கள் இப்பாடசாலைக்கு தாராளமாக உதவிகளை வழங்கலாம்.

இப்பாடசாலையில் தரம் 01முதல் தரம் 09 வரை சுமார் 320 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.



அக்கரைப்பற்று தக்வா ஜும் ஆ பள்ளிவாசலின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஜனாஸா மற்றும் அவசர வாகன சேவைக்காக இரண்டு தனவந்தர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய இரண்டு வாகனங்கள் அண்மையில் வைபவரீதியாக சேவைக்காக கையளிக்கப்பட்டன. தக்வா ஜும் ஆ பள்ளிவாசல் வளாகத்தில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் அல்ஹாஜ் எம்.எம்.எம். ரியாத் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## நிலக்கரி மின்சார உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும்

**(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)**



நிலக்கரி மூலமாக மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய குடியரசு முன்னணிக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சம்மாந்துறையில் 'கட்டியெழுப்புவோம்' எனும் தலைப்பில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டில் பரம்பரை அரசியல் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். திறமைக்கு முதலிடம் அளிக்கும் அரசியல் சூழல் உருவாக்க வேண்டும்.

நமது நாட்டை இக்கட்டான நிலையிலிருந்து மீட்பதற்கு சரியான தலைமை வேண்டும். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்விமான்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் எங்களால் சிறந்த சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் படித்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 2025 முதல் 2028 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்த நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வரலாமென்ற திட்டத்தை முன் வைத்துள்ளோம். 2028 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு செயற்படுகிறோம். இந்த குறுகிய 03 வருட காலத்தில் எங்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய வழியை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

நிலக்கரி மூலமாக மின்சார உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சூரிய சக்தி மின்சாரத்தை புத்தளம் முதல் முல்லைத்தீவு வரை மேற்கொள்ளமுடியும். யாழ்ப்பாணபிரதேசத்தில் காற்றாடி மூலமாக மின்சார உற்பத்தியை மேற்கொள்ள முடியும். இவ்வேலைத்திட்டங்களை செய்வதற்கு நிபந்தனை இருப்பதாக அவர் தெரிவித்தார்.

### நெல் சுத்திகரிப்பு ஆலைக்குள் நுழைந்து காட்டு யானைகள் அட்டகாசம்

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

கல்முனை நகர் மத்தியில் தரவை சித்தி விநாயகர் ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள விதை நெல் சுத்திகரிப்பு ஆலைக்குள் கடந்த ஞாயிறுக்கிழமை இரவு உட்புகுந்த காட்டு யானைகள் அங்கிருந்த விதை நெல் மூடைகளை துவம்சம் செய்துள்ளதுடன், சுத்திகரிப்பு ஆலைக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

அண்மைக் காலமாக கல்முனை பிராந்தியத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் இரவு வேளையில் மிகவும் அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

## அடிப்படை சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**



அம்பாறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட மங்களகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது மக்களுக்கான அடிப்படை சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு மங்களகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஏ.சீ. சத்தரசிங்க தலைமையில் அண்மையில் மங்களகம பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இறக்காமம் பிரதேச காதி நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான பாறூக் சாஹிப் கலந்து கொண்டார்.

அடிப்படை சட்டங்கள், பொலிஸாரின் கடமை பொறுப்புக்கள், பொது மக்கள் நடந்துக் கொள்ள வேண்டிய விதங்கள், வன பாதுகாப்பு, மது வரி மற்றும் பொலிஸ் திணைக்கள நடவடிக்கைகள், திணைக்கள சட்டங்களை மீறும் போது ஏற்படும் விளைவுகள், மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதில் பொது மக்களின் பங்கு மற்றும் அதிகாரிகளின் கடமைகள் பற்றிய விழிப்புணர்வை சட்டத்தரணி பாறூக் சாஹிப் அங்கு கலந்து கொண்டவர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் சமுதாய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வன பரிபாலன அதிகாரி, விவசாய அபிவிருத்தி சங்க உறுப்பினர் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கில் நீர்நிலைகளில் நீர்மட்டம் திடீர் அதிகரிப்பு

**(மாளிகைக்காடு குறூப், அட்டாளைச் சேனை மத்திய நிருபர்கள்)**

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தற்போது பரவலாக அதிக மழை வீழ்ச்சி பதிவாகிவருகின்றது.

இதனால் மாகாணத்திலுள்ள நீர்நிலைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள், கிணறுகள் மற்றும் குட்டைகள் என்பவற்றின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துவருகின்றது.

எனவே, பொது மக்கள் நீரேந்து பிரதேசங்களில் மிக அவதானமாக முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொண்டு அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீர் நீலைகளில் நீராடி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கிழக்கில் கடந்த காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திற்கு வெளி மாகாணங்களிலிருந்து வருகை தருபவர்கள் நீரேந்து பகுதிகளில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் அறிவித்துள்ளது.

### மயிலத்தமடுவில் புதிய சோதனைச் சாவடி

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை மயிலத்தமடு மாதவனை பகுதியில் பொலிஸ் சோதனைசாவடியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சோதனை சாவடி கடந்த 5ஆம் திறந்து வைக்கப்பட்டது. மேய்ச்சல் தரை பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் பண்ணையாளர்கள் விடுத்த கோரிக்கைக்கமைய சோதனைசாவடி அமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் பிரிவாக இப்புதிய பொலிஸ் சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

## வீதியில் சென்ற மயிலுடன் மோதி விபத்து: இளைஞன் பலி!

**(மண்டூர் தினகரன் நிருபர்)**

கல்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்குடா பிரதான வீதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் இளைஞனொருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அமைதி ஒழுங்கை வாகனேரி பிரதேசத்தைச் சேர்ந்த இராசமாணிக்கம் டிலோஷன் (18) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி பாசிக்குடாவிலுள்ள உணவகமொன்றில் தனது வேலையை முடித்து விட்டு வீட்டுக்கு திரும்பும் வழியிலேயே கற்குடா பிரதான வீதியில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

தனது மோட்டார் சைக்கிளில் சென்றுக் கொண்டிருக்கும் போது திடீரென வீதிக்கு வந்த மயிலுடன் மோதியமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மூதூரில் மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டம்

**(கிண்ணியா தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்)**

கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச செயலகங்களின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரனையுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 04 மற்றும் 05 ஆம் திகதிகளில் நடைபெற்றன. இந்நிகழ்வில் வளவாளரால் ஆரோக்கியமான உணவு முறைகள் பற்றியும் அதனை எவ்வாறு செய்வது தொடர்பான செய்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது.

மற்றும் மாற்றுத்திறனாளி பிள்ளைகளால் பெற்றோருக்கு ஏற்படும் சவால்களுக்கு உளவள ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும் கால்நடை அபிவிருத்தி போதனா ஆசிரியர் பேரின்ப சிவம் என்பவரால் கால்நடைகளை பாதுகாப்பது தொடர்பாகவும் இதன் போது தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்திலிருந்து சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் மற்றும் மாவட்ட உளவள துணை உத்தியோகத்தர் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கொட்டியாரக்குடா கடலரிப்பால் மீனவர்களுக்கு பெரும் பாதிப்பு

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் கொட்டியாரக்குடாக் கடலில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் பாரியளவிலான கடலரிப்பினால் தாம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக கரையோர பிரதேசங்களில் வசிக்கும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் கொட்டியாரக்குடாக் கடற்கரையை அண்டியதாக மீனவர் குடியிருப்புக்கள், மீன்வாடிகள், மீனவர் ஓய்வு விடுதிக் கட்டடங்கள் என்பனவும் கடல் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் கடலரிப்பினால் சேதத்திற்குள்ளாகி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடற்கரையோரத்தில் ஏற்பட்டுவரும் கடலரிப்பை தடுக்க தேவையான இடங்களில் கல்வேலிகள் அமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் கரையோரத்தில் உள்ள வளங்கள் படிப்படியாக சேதமடைந்து அழிவுறக் கூடிய நிலை ஏற்படுமெனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மூதூர் கொட்டியாரக்குடாக் கடற்கரையோரத்தில் காணப்படும் சகல வளங்களையும் கடலரிப்பிலிருந்து உரிய முறையில் பாதுகாக்க தேவையான இடங்களில் கல்வேலிகளை அமைக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இராவணேஸ்வரன் சித்திர தேர் வடிவமைப்புக்காக நிதி சேகரிக்கும் பணி

யாழ். விசேட நிருபர்

இராவணேஸ்வரன் சித்திர தேருக்கு நிதி சேகரிக்கும் அருட்பணியை தாம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த திருநீற்று சித்தரான தவத்திரு கணபதி கதிர்வேல் சுவாமிகள், இதற்காக பக்தர்களிடம் உதவி கோரியுள்ளார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (07) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்கான பாத யாத்திரையை முன்னின்று தான் நடத்தி வருவதுடன், யாத்திரையின் போது முன்னின்று வேல் தாங்கிச் செல்பவனும் தானேயெனவும், அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பாத யாத்திரையின் போது, சித்திர தேரை இழுத்துச் செல்லவுள்ளதுடன், சித்திர தேரை வடிவமைக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக பக்தர்கள் நிதி உதவி தந்து நல்க வேண்டுமெனவும், அவர் கோரினார்.

# புதுமாத்தளன் கடற்கரையில் கரையொதுங்கிய 22Kg கஞ்சா

## பொலிஸார் தீவிர விசாரணை

ஓமந்தை விசேட நிருபர்

முல்லைத்தீவு, புதுமாத்தளன் கடற்கரையில் 22 கிலோகிராம் நிறை கொண்ட கஞ்சாப் பொதிகள் கரையொதுங்கிய போது, அவற்றை பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை (07) காலை மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக நேற்றுக் காலை 6.30 மணியளவில் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, உரிய இடத்துக்குச் சென்ற அவர்கள் கஞ்சா பொதிகளை அவதானித்து, முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர். இதுவரை 11 கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், கடற்கரையில் சோதனை தொடர்வதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள கஞ்சா பொதிகளை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ள பொலிஸார், கடற்றொழிலாளர் சிலரிடமும் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.



# வடக்கின் உதயம்

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய இணையத்தள சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தை முன்னிலைப்படுத்திய இணையத்தள சேவையை ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனர் நேற்று செவ்வாய்க்கிழமை (07) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

சமய, சமூகப் பணிகளில் ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்துவரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான இணையத்தள சேவையினூடாக ஆலய பூஜைகள், நிகழ்வுகள் மற்றும் சமூகநலத் திட்டம் தொடர்பான முழு விபரங்களையும் உலகெங்கிலுமுள்ள அனைவரும் அறிந்துகொள்ள முடியுமென, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். அத்துடன், சமூகநலத் திட்டங்கள் தேவைப்படுவோருக்கு உரிய முறையில் திட்டங்கள் சென்றடைய வழிவகுக்குமெனவும், ஆலய நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர்.



(பு.கஜிந்தன்)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீனத் தூதுவர் Ki Chen Hong, சர்வதேச இந்து – பௌத்த ஒற்றுமை அமைப்பின் செயலாளரும் யாழ். நண்பர்கள் அமைப்பின் தலைவருமான கலாநிதி சிதம்பரம் மோகனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (06) யாழ். நாக விகாரையில் சந்தித்துக் கலந்துரையாடினார். கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் ஆகிய விடயங்கள் தொடர்பாக அவர்கள் இருவரும் கலந்துரையாடினர். இதன்போது, பொதுமக்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# மலைச்சாரல்

## ஹட்டனில் போட்டோகொப்பி மெஷின்கள் வழங்கிவைப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட கோட்டம் 01, 02, 03, 04 ஆகியவற்றுக்கு போட்டோகொப்பி மெஷின்களை நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் நேற்று செவ்வாய்க்கிழமை (07) வழங்கி வைத்துள்ளார்.

ஹட்டன் வலயக் கல்விப் பணிமனையில் வைத்து இந்த மெஷின்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய இந்த போட்டோகொப்பி மெஷின்கள், மேற்படி கோட்டக் கல்விப் பணிப்பாளர்களிடம் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில் ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் நிஷால் அழகக்கோன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரின் மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் குமாரசுவாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### சிகிரியாவை பார்வையிட வரும்

# சுற்றுலா பயணிகளுக்கு நவீன வசதிகளை செய்துகொடுக்க ஏற்பாடு

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க



அக்குறணை குறூப் நிருபர்

சிகிரியா குன்றை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிடத்துடன் நவீன வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக, புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

வரையறுக்கப்பட்ட ஊடகவியலாளர் கூட்டுறவு அமைப்பின் ஏற்பாட்டிலும் கலாசார அமைச்சு, மத்திய கலாசார நிதியம், தொல்பொருளியல் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையிலும் சிகிரியாவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "சிகிரியாவை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி எதிர்காலத்தில் சிகிரியா தொடர்பாக 10 மொழிகளில் விளக்கம் பெற்றுக்கொள்வதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பண்டைய இராஜதானியாக விளங்கிய காலத்தில் சிகிரியா குன்றின் வடக்குத் திசையில் பயன்படுத்தப்பட்ட பாதையொன்றும் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அதையும் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், 'சிங்க பாதம்' என்று அழைக்கப்படும் நுழைவாயிலினூடாக குன்றுக்குச் செல்லும் படிக்கட்டுகளையும் மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## கண்டி அப்துல் கலாம் அறக்கட்டளையால் உதவி



அக்குறணை குறூப் நிருபர்

மஹியங்கனையில் தெரிவு செய்யப்பட்ட விசேட உதவி தேவைப்படும் சிறுவர்களுக்கு சர்வதேச அப்துல் கலாம் அறக் கட்டளையால் பல்வேறு உதவிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (06) வழங்கி வைக்கப்பட்டன.

மீகஹகியுல ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேசத்திலுள்ள விசேட உதவி தேவையுடைய பலர் கலந்துகொண்டனர். கண்டியை தலைமையகமாகக் கொண்டியங்கும் சர்வதேச அப்துல் கலாம் அறக் கட்டளையின் இலங்கைக் கிளைத் தலைவர் என்.கருணாகரன், செயலாளர் எம்.எஸ்.எம். ஜஹுதர், சட்ட ஆலோசகர் எச்.பி.விஜேதுங்க உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

### தீபாவளியையிட்டு – கண்டியில்

## உலர் உணவு வழங்கல்

மாவத்தகம தினகரன் நிருபர்



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கண்டி மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள தோட்டப்புற மக்களுக்கு கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், தீபாவளிப் பண்டிகையை பிரதிபலிக்கும் தமிழ் பாரம்பரிய விளையாட்டுப் போட்டியும் கண்டி அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் கண்டி தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் பி. குமாரதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கலந்துகொண்டு சிறப்பித்தார். அத்துடன், சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர் எஸ்.முத்தையா, பெ.பழனியப்பன், தொழிலதிபர் மூர்த்தி, மலையக கலாசார சங்கத் தலைவர் எஸ்.பரமேஸ்வரன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கலஹா, தெல்தோட்டை, பன்விலை ஹந்தானை உள்ளிட்ட இடங்களைச் சேர்ந்த 750 குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபா பெறுமதியான உலர் உணவுகள் வழங்கப்பட்டன.

## மண்சரிவினால் மக்கள் சிரமம்

ஊவா சுழற்சி நிருபர்

ஹப்புத்தளை வெலிமடை பிரதான பாதையில், வல்கஹவலை பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவு காரணமாக அவ்வீதியை பயன்படுத்துவோர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (06) சிரமத்தை எதிர்நோக்கினர்.

வல்கஹவலை பிரதேசத்தில் பெய்த அடை மழையால் அவ்வப்போது மண்சரிவு இடம்பெற்றதுடன், வீதித் தாழிறக்கமும் ஏற்பட்டது. இதனால், மேற்படி பிரதான வீதியூடான போக்குவரத்து தற்காலிகமாக தடைப்பட்டதாக, ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வீதியை பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

### சனத்தொகை கணக்கெடுப்பு

## நுவரெலியாவில் பட்டியல் தயாரிப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு தொடர்பாக நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் பட்டியல் தயாரிப்புப் பணி நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலகொட தலைமையில் அம்மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (06) ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 491 கிராமப் புற சேவை களங்களில் இவ்வேலைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளன. இந்த பட்டியல் தயாரிப்புப் பணியில் நுவரெலியா மாவட்ட புள்ளிவிபரவியல் திணைக்களத் தலைவர், புள்ளி விபர நிபுணர் ஷஷிக சியாதரகே உள்ளிட்ட பலர் பங்கேற்றுள்ளனர்.

NSB

# தேசிய சேமிப்பு வங்கி

## மீட்கப்படாத அடகுப்பொருள் ஏலவிற்பனை : 2023 – நவம்பர்.

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை (அத்தினம் அடங்கலாக) அடகு வைக்கப்பட்டு ஆனால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களுக்கு முன் மீட்கப்படாத மற்றும் அடகினைப் புதுப்பித்துக் கொள்ளப்படாத தங்க ஆபரணங்களை பின்வரும் தினங்களில் குறித்த ஏலவிற்பனை நிலையங்களில் காலை 09.00 மணி முதல் ஏலத்தில் விடப்படும்.

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.11.16 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.11.18**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 30, பார்க் வீதி, பண்டாரவளை | பண்டாரவளை |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88, கொடுக்கொடல்லை வீதி, கண்டி | கண்டி, முள்கம்பளை, கண்டி அஞ்சல் கிளை, கண்டி 2ம் கிளை, கண்டி சிட்டி சென்டர், நிகில்லகஸ்கட கடுகஸ்தோட்ட, அலவத்துகொட, கலகெதர, திகன, வத்தேகம |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 32, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி | நாவலப்பிட்டி, கினிகத்ஹேன |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, லோவர் கிங் வீதி, பதுளை | பதுளை, ஹாலிஎல, பஸ்ஸர, வெலிமட |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 26, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை | மாத்தறை, கெகனதுரை, வெலிகம, மாத்தறை 2ம் கிளை, திக்வெல்ல, தெவிநுவர |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52, ஹொரன வீதி, பாணந்துறை | பாணந்துறை, வாத்துவ, பண்டாரகம, களுத்துறை, அளுத்கம, பேருவளை, மதுகம, களுத்துறை 2ம் கிளை, ஹொரண, இங்கிரிய, கிரிஎல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 130, மல்வத்த வீதி, கொழும்பு - 11 | புறக்கோட்டை கிளை, மாளிகாவத்த, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், நகர கிளை, உலக வர்த்தக மைய கிளை, சிட்டி பிளஸ், நாரஹேன்பிட்டி, ராஜகிரிய, வெல்லம்பிட்டிய, முல்லேரியா, பொரல்ல |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி | இரத்தினபுரி, குருவிட்ட, நிவித்திகலை |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88/88A, கினிகத்ஹேன வீதி, யட்டியாந்தோட்டை | யட்டியாந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய, தெரணியக்கல |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 98, கம்பஹா வீதி, கிரிந்திவெல | கிரிந்திவெல, பூகொட, வெலிவேரிய |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, அமரதுங்க கட்டிடம், டி. எஸ். சேனநாயக்க வீதி, அம்பாரை | அம்பாறை, அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை, தம்பிலுவில், அம்பாறை 2ம் கிளை, உஹன |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 139, வெல்லவாய வீதி, மொனராகல | மொனராகல, பிபிலை, புத்தள, சியம்பலாண்டுவ, படல்கும்புர வெல்லவாய |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, புகையிரத நிலையம் முன், A9 வீதி, கொடிகாமம் | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, பி.டப்ளியூ.டி. வீதி, முல்லைத்தீவு | முல்லைத்தீவு, மல்லாவி |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 15, கொழும்பு வீதி, வென்னப்புவ | வென்னப்புவ, மாரவில, தன்கொட்டுவ நாத்தாண்டிய |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 21, மரதன்கடவெல வீதி, கெக்கிராவ | கெக்கிராவ, கலென்பிதுனுவெவ, கல்னேவ |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 93, இரத்தினபுர வீதி, பதுரலிய | பதுரலிய, புலத்சின்ஹல, கலவான |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.11.16 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.11.19**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 445, மாத்தளை வீதி, தம்புள்ள | தம்புள்ள, நாஉல, கலேவெல |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 341, கொழும்பு வீதி, பேராதெனிய | பேராதெனிய, பிலிமதலாவ, தெல்தோட்ட |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 24, பார்க் வீதி, நுவரெலியா | நுவரெலியா, றாகல |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 96, டி.சி. வணிகசேகர மாவத்தை, அகுரஸ்ஸ | அகுரஸ்ஸ, மொரவக்க, கம்புருபிட்டிய, தெனியாய, நெலுவ |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 379, கண்டி வீதி, கேகாலை | கேகாலை, வரக்காப்பொல, றம்புக்கன, கேகாலை 2ம் கிளை |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, கண்டி வீதி, மாவனெல்ல | மாவனெல்ல, அரநாயக்க |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 342, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல | மொரட்டுமுல்ல, கட்டுபெத்த, புவக்கரம்ப, பிலியந்தல, பிலியந்தல 2ம் கிளை, கஹத்துடுவ |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 430/10, இஹல கரகஹமுன, கண்டி வீதி, கடவத்த | கடவத்த, கிரிபத்கொட, களனி, றாகம, கனேமுல்ல, மாகொல, கடுவெல, தெல்கொட |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய கடைத்தொகுதி, நிட்டம்புவ | நிட்டம்புவ, வெயான்கொட, மீரிகம |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 116, 116A பஸார் வீதி, மட்டக்களப்பு | மட்டக்களப்பு, ஆரயம்பதி, செங்கலடி, வாழைச்சேனை |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 292, மட்டக்களப்பு வீதி, பலகைமோல் சந்தி, கதுருவெல | கதுருவெல, ஹிங்குராங்கொட, மெதிரிகிரிய |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 136, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, இன்னர் சேர்குளர் வீதி, வவுனியா | வவுனியா |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 14, கண்டி வீதி, குருணாகல் | குருணாகல், மெல்சிரிபுர, ரிதிகம, பொல்பித்திகம, மாவத்தகம, இப்பாகமுவ, குருணாகல் 2ம் கிளை |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 591/1, புதிய நகரம், அநுராதபுரம் | அநுராதபுரம், நொச்சியாகம, அநுராதபுரம் 2ம் கிளை, எப்பாவல |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.11.23 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.11.25**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 3/5 டி.பி. பானபொக்க வீதி, கம்பொள | கம்பொள, கெலிஓயா, புஸ்ஸல்லாவ |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 114, நுவரெலியா வீதி, தலவாக்கல | தலவாக்கல, புண்டுலோயா, ஹட்டன் |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 20, கொழும்பு வீதி, கலுவெல்ல வீதி, காலி | காலி, காலி 2ம் கிளை, உடுகம, பத்தேகம, கராப்பிட்டிய, ஹிக்கடுவ, ஹபராதுவ, இமதுவ, யக்கலமுல்ல, அஹங்கம |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 4, வந்துரப்ப வீதி, அம்பலாந்தோட்ட | அம்பலாந்தோட்ட, அங்குணகொலபெலஸ்ஸ, சூரியவெவ, ஹம்பாந்தோட்ட, திஸ்ஸமஹாராம, கதிர்காமம் |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | களுபோவில, தெல்கந்த, பொரலஸ்கமுவ, நுகேகொட, பிட்டக்கோட்ட, நாவல, கிருலப்பன, |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய நகரம் எம்பிலிபிட்டிய | எம்பிலிபிட்டிய, கொடக்கவெல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 12, கொழும்பு வீதி, கம்பஹா | கம்பஹா, யக்கல, கம்பஹா 2ம் கிளை, மினுவான்கொட, திவுலபிட்டிய |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி | களுவாஞ்சிகுடி, கல்முனை, பெரியகல்லாறு, பலுகாமம் |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52/1 மருதம் கட்டிடம், கொடிக்காமம் வீதி, நெல்லியடி | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 16, வாழ்வுதயம் கொம்பிளக்ஸ், தலைமன்னார் வீதி, மன்னார் | மன்னார், வன்காலை |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 161, பிரதான வீதி, குளியாப்பிட்டி | குளியாப்பிட்டி, நாரம்மல, ஹெட்டிப்பொல, பன்னல |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, குருணாகல் வீதி, சிலாபம் | சிலாபம், மாதம்ப, பிங்கிரிய |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 66, பிரதான வீதி, அலவ்வ | அலவ்வ, பொல்கஹவெல, கிரியுல்ல |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.11.23 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.11.26**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 39, 40, புதிய நகரம், கண்டி வீதி, மஹியங்கன | மஹியங்கன |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 147, திருகோணமலை வீதி, மாத்தளை | மாத்தளை |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 341, காலி வீதி, அம்பலாங்கொடை | அம்பலாங்கொடை, உரகஸ்மன்ஹந்திய, பிட்டிகல, எல்பிட்டிய |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 55, பெலியத்த வீதி, ஹக்மன | ஹக்மன, பெலியத்த, தங்கல்ல, வலஸ்முல்ல, வீரக்கெட்டிய, மித்தெனிய, ஊருபொக்க, தெய்யந்தர, கட்டுவன |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, ஹைலெவல் வீதி, ஹோமாகம | ஹோமாகம, மீகொடை, கொட்டாவ மஹரகம, பத்தரமுல்ல, அத்துருகிரிய, தலவத்துக்கொட, மாலபே, ஹன்வெல்ல |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | கல்கிஸ்ஸ, தெகிவளை, கொள்ளுப்பிட்டி 2ம் கிளை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்த, தலைமை அலுவலகக் கிளை மொரட்டுவ, |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 57/1, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவெல | அவிசாவெல, ருவன்வெல, எஹெலியகொட |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 71/A, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொட | பலாங்கொட, கஹவத்தை, பெல்மடுல்ல |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, அவரிவத்த, கட்டுநாயக்க (பஸ் நிலையம் முன்பாக) | கட்டுநாயக்க, ரத்தொலுகம, நீர்கொழும்பு, கொச்சிக்கடை |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 257, நீர்கொழும்பு வீதி, வத்தளை | வத்தளை, பேலியகொட, மஹபாகே, ஜாஎல, கந்தானை |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 5, பிரதான வீதி, திருகோணமலை | திருகோணமலை, கந்தளாய் |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 496, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் 2ம் கிளை, ஊர்காவற்துறை (கய்ட்ஸ்), திருநெல்வேலி, கோப்பாய் |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, அனுராதபுர வீதி, கஹடகஸ்திகிலிய | கஹடகஸ்திகிலிய, கெபித்திக்கொல்லாவ, ஹொரவப் பொத்தான, மதவாச்சி |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 07, பிரதான வீதி, கல்கமுவ | கல்கமுவ, மாஹோ, தம்புத்தேகம |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 1/10, பழைய வைத்தியசாலை வீதி, நிக்கவெரட்டிய | நிக்கவெரட்டிய, புத்தளம், ஆணமடுவ, வாரியப்பொல |

எவ்வித தொடர் அறிவித்தல்களுமின்றி அடகு ஏலவிற்பனையை ரத்துச் செய்வதற்கோ, கூட்டிணைப்பதற்கோ அல்லது பிற்போடுவதற்கோ வங்கிக்கு சகல உரித்துமுண்டு.

**ஒப்பமிட்டவர்/பிரதிப் பொது முகாமையாளர்**
**(செயற்பாடுகள்)**

**தேசிய சேமிப்பு வங்கி**
**தலைமை அலுவலகம், கொழும்பு 03.**
**தொலைபேசி : 2573008-11, நீடிப்பு இல. 441, 533, பெக்ஸ் : 2574018**



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
## விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

1. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் மாவட்ட விளையாட்டுப் பயிற்சி நிலையங்களுக்கு கொள்வனவு செய்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | உருப்படிகளின் விபரம் | உருப்படிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | **Discuss** | |
| | Discuss 1 kg | 10 |
| | Discuss 1.5 kg | 10 |
| | Discuss 1.75 kg | 10 |
| | Discuss 2 kg | 10 |
| 2 | **Javelin** | |
| | Javelin 600g | 18 |
| | Javelin 800g | 18 |
| 3 | **Shot Put** | |
| | Shot Put 1 kg | 1 |
| | Shot Put 4 kg | 14 |
| | Shot Put 7.26 kg | 14 |
| 4 | **Hammer** | |
| | Hammer 4 kg | 7 |
| | Hammer 7.2 kg | 4 |
| 5 | **Tape** | |
| | Tape 30 m | 4 |
| | Tape 50 m | 25 |
| | Tape 100 m | 10 |
| 6 | **Stop Watch** | |
| | Stop Watch Lap 100 | 25 |
| 7 | **Whistle** | |
| | Whistle Fox 40 | 15 |
| 8 | **Markers** | 20 |
| 9 | **Starting Block** | 20 |
| 10 | **Netball** | |
| | Netball (Training) | 75 |
| | Netball Net | 3 |
| 11 | **Skipping Rope** | 164 |
| 12 | **Badminton** | |
| | Badminton Net | 10 |
| | Badminton Shuttlecock Nylon | 27 |
| | Badminton Shuttlecock Feathers | 18 |
| | Badminton post | 5 |
| 13 | **Cones** | |
| | Cones Inch 06 | 100 |
| | Cones Inch 12 | 100 |
| | Cones Inch 18 | 100 |
| | Cones Inch 24 | 100 |
| 14 | **Hurdles** | |
| | Mini Hurdles Inch 08 | 20 |
| | Mini Hurdles Inch 10 | 20 |
| | Mini Hurdles Inch 12 | 100 |
| | Mini Hurdles Inch 18 | 100 |
| | Mini Hurdles Inch 24 | 20 |
| 15 | **Tug of War Rope** Lot | 1 |
| 16 | **Volleyball** | |
| | Volleyball Training Size 05 | 153 |
| 17 | **Harness Belt** | 47 |
| 18 | **Dumbbells** | |
| | Dumbbells 500 g | 4 |
| | Dumbbells 1 Kg | 8 |
| | Dumbbells 2 Kg | 8 |
| | Dumbbells 2.5 Kg | 4 |
| | Dumbbells 3 Kg | 4 |
| | Dumbbells 4 Kg | 4 |
| | Dumbbells 5 Kg | 6 |
| | Dumbbells 7.5 Kg | 2 |
| | Dumbbells 10 Kg | 2 |
| | Dumbbells 12.5 Kg | 2 |
| 19 | **Heart Rate Monitor** | 10 |
| 20 | **High Jump** | |
| | Cross Bar | 10 |
| | Mattress | 2 |
| | Up Rights | 4 |
| 21 | **Air pump** | 13 |
| 22 | **Relay Batten** | 22 |
| 23 | **Gym Ball** | 12 |
| 24 | **Electric Scale** | 9 |
| 25 | **Ankle Guard** | 6 |
| 26 | **Chin Guard** | 10 |
| 27 | **Measure the BMI index the device** | 1 |
| 28 | **Weight Plates** | |
| | Weight Plates 1kg | 4 |
| | Weight Plates 2.5 kg | 10 |
| | Weight Plates 5 kg | 10 |
| | Weight Plates 10 kg | 10 |
| 29 | **Basketball** | |
| | Basketball Size 06 | 25 |
| | Basketball Size 07 | 25 |
| 30 | **First Aid Box** | 3 |
| 31 | **Agility Rings** Feet 02 | 50 |
| 32 | **Agility Poles** Feet 05 | 40 |
| 33 | **Thermometer** | 1 |
| 34 | **Leg Press Machine** | 1 |
| 35 | **Kettle Balls** | |
| | Kettle Balls Size 02 | 2 |
| | Kettle Balls Size 03 | 2 |
| | Kettle Balls Size 04 | 1 |
| | Kettle Balls Size 05 | 2 |
| 36 | **Tennis Ball** | 20 |
| 37 | **Football** | |
| | Football Size 05 Training | 150 |
| | Football Goal Post Net | 5 |
| | Football Goal Post | 1 |
| 38 | **Table Tennis** | |
| | Table ( Feet 9 × 5) | 1 |
| | Net | 2 |
| | Racket | 30 |
| | Balls (40mm) | 100 |
| 39 | **Kabaddi Mattress** (1m × 1m) | 450 |
| 40 | **Wrestling Mattress** (12m × 12m) | 3 |
| 41 | **Long Jump Board** | 2 |
| 42 | **Weight Jacket** | 10 |
| 43 | **Boxing** | |
| | Boxing Sparring Gloves Blue (oz. 10) | 5 |
| | Boxing Sparring Gloves Red (oz. 10) | 5 |
| | Boxing Sparring Gloves Blue (oz. 12) | 5 |
| | Boxing Sparring Gloves Red (oz. 12) | 5 |
| | Boxing Punching Bag Small | 6 |
| | Boxing Punching Bag Medium | 6 |
| | Boxing Punching Bag Large | 4 |
| | Boxing Head Guard Medium | 14 |
| | Boxing Head Guard Large | 14 |
| | Boxing Hand Pad Medium | 2 |
| | Boxing Hand Pad Large | 2 |
| 44 | **Hockey** | |
| | Hockey Sticks 36 Inch | 10 |
| | Hockey Sticks 36.5 Inch | 10 |
| | Hockey Sticks 37 Inch | 10 |
| | Hockey Ball | 75 |
| 45 | **Soft Ball Cricket** | |
| | Bat Size 05 | 50 |
| | Bat Size 06 | 50 |
| | Ball | 75 |
| | Plastic Wicket Set | 10 |
| 46 | **Judo Mattress** | 1 |
| 47 | **Volleyball Bucket** | 3 |
| 48 | **Ladder** | |
| | 3.5 m | 17 |
| | 10 m | 2 |
| | 15 m | 20 |
| 49 | **Jumping Box** | |
| | Inch 06 | 5 |
| | Inch 12 | 5 |
| | Inch 18 | 5 |
| | Inch 20 | 5 |
| | Inch 24 | 5 |
| | Inch 30 | 5 |
| | Inch 36 | 5 |

| உரு. இல. | ஒப்பந்த இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | அமைவிடம் |
|---|---|---|---|---|
| 1 | DSD/P/03/ விளையாட்டு உபகரணங்கள் - 2023 | விளையாட்டு உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகை | 12,500.00 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07. |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட லொட்களுக்கு விலைக்கோரலாம் மற்றும் ஒவ்வொரு லொட்டுக்கான விலைமனு தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கைளிக்கப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலுக்கு உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவல்களை கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் பின்வரும் முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2023-11-08ஆம் திகதி முதல் 2023-11-28ஆம் திகதி வரையும் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் காசாளருக்குச் செலுத்திய பின்னர், மேற்கூறிய முகவரியிலுள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைப் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
7. விலைமனுப் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்பெற்ற வங்கிச் செயற்பாட்டின் கீழ் இணைப்பு 1C பிரகாரம் (விலைக்கோரல் ஆவணத்தின் விலைமனுக்களைத் தயாரித்தல்) கொழும்பு - 07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. மேற்கூறிய முகவரியில் 2023 நவம்பர் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு 2023 நவம்பர் 29ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். (விலைமனுக்களை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் இரண்டாம் மாடியிலுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்). பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 0112677960**
**தொலைநகல்: 0112669884**

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2023–11–08

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | கந்ததோடை முதல் கட்டுடை வரையில் நீரிறைக்கும் வழிக்கு HDPE & DI குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல **: RSC/N/T&C/CEDE/LAYING OF PUMPING KATHARODAI TO KADDUDAI/2023/082** | 20,000/- +VAT ** | ரூபா 857,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 85.67 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 29/11/2023 மு.ப. 10.00 மணி |
| 02 | அம்பாறை கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிக்கும் பொறித்தொகுதியிலிருந்து கொட்டப்பட்டுள்ள உலர்ந்த சேறுகளை அகற்றுதல்<br>ஒப்பந்த இல **: RSC(E)/ AGM(ES)/C /SLUDGE/ KWTP/O&M/ AMP/2023 /46** | 6,000/- +VAT ** | ரூபா 161,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.0 மில்லியன் | பி.ஒ.நி. (கிழக்கு தெற்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மாராம மாவத்தை, அம்பாறை.<br>Tele: 063-2223926<br>Fax : 063-2224975 | 23/11/2023 பி.ப. 1.30 மணி |
| 03 | உக்குவளை நீர் வழங்கல் திட்டத்தில் வருமானமற்ற நீர் குறைப்பிற்கான நீர்க்கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல **: RSC-C/CN/CIVIL/O&M/ UKUWELA/2023/32** | 6,000/- +VAT ** | ரூபா 60,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.6 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-11-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P-0812492311)** | 22/11/2023 பி.ப. 2.00 மணி |
| 04 | இரத்தினபுரி பொது வைத்தியசாலை நீர் வழங்கல் திட்டம் - இரத்தினபுரி பொது வைத்தியசாலையிலுள்ள JICA சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் உயர்த்தப்பட்ட தாங்கி மற்றும் Flocculator என்பவற்றின் மிகுதி நிர்மாண வேலைகள்<br>ஒப்பந்த இல **: RSC(SAB)/P&D/CIVIL/RECH/RAT/ HOSPITAL/2023/30R** | 12,500/- +VAT ** | ரூபா 235,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.8 மில்லியன் | பிஒநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 22/11/2023 பி.ப. 2.00 மணி |
| 05 | கேகாலை பிராந்தியத்தில் புதிய சேவை இணைப்புகளை வழங்குவதற்கு அகழ்தல், மீள் நிரப்புதல் மற்றும் குழாய்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல **: RSC(SAB)/RM(KEG)/CIVIL/O&M/ KEG.REG/2023/36** | 12,500/- +VAT ** | ரூபா 300,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.6 மில்லியன் | பிஒநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 22/11/2023 பி.ப. 2.00 மணி |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 06 | அம்பாறை - கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு தூளாக்கப்பட்ட உயர்ப்புள்ள கார்பனை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல **: RSC (E) /AGM (ES) /S&D/ PAC/KWTP/O&M/ AMP/2023/49** | 12,500/- +VAT ** | ரூபா 230,000/- | 19.5 தொன்கள் மரத்தை அடிப்படையாகக் கொண்ட தூளாக்கப்பட்ட உயிர்ப்புள்ள கார்பன் வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஒ.நி. (கிழக்கு தெற்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மாராம மாவத்தை, அம்பாறை.<br>Tele: 063-2223926<br>Fax : 063-2224975 | 23/11/2023 பி.ப. 1.30 மணி |
| | 2023-10-25ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. 60,000 எண்ணிக்கையான Volumetric Displacement Type 15mm(1/2’’) வீட்டு நீர்மானி உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல:**DGM/M&E/WMSP/15/2022/06** - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-11-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | 2023-09-20ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. இரத்மலானையில் அமைந்துள்ள நீர் மற்றும் துப்புரவேற்பாட்டிற்கான விசேடத்துவ நிலையத்தில் மாநாடுகள் மற்றும் உற்சவ வேளைகளுக்கான சேவைகளை வழங்குவதற்கு ஹோட்டல் / உணவு வழங்குநரைப் பதிவு செய்தல். ஒப்பந்த இலக்கம்: CONTRACT NO: NWSDB/CEWAS/REG/FOOD/2023/03 - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-11-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 07 | அம்பாறை பிராந்தியத்திலுள்ள கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Spare Pump Stack Unit வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல **: RSC (E) /AGM (ES) /S&D/SPARE/PUMP/ ECTAD-WTP/AMP/RH/2023/18R** | 6,000/- +VAT ** | ரூபா 110,000/- | **Spare of Pump Stack** Unit வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஒ.நி. (கிழக்கு தெற்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மாராம மாவத்தை, அம்பாறை.<br>Tele: 063-2223926<br>Fax : 063-2224975 | 23/11/2023 பி.ப. 1.30 மணி |
| 08 | அம்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு Bulk Water Meter ஒன்றை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல **: RSC-C/CE/NRW/M&E/AMPITIYA/2023/82** | 6,000/- +VAT ** | ரூபா 55,000/- | Bulk Flow Meter வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடனான 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 22/11/2023 பி.ப. 2.00 மணி |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 09 | நீர் தொழில்நுட்பத்திற்காக சீன இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் விளங்கப்படுத்துதலுக்கு தங்குமிட வசதிகளை நிர்வகித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு தேர்ச்சியற்ற தொழிலாளரை வேலைக்கமர்த்துவதற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல **: RSC-C/JRDC/SER/MWS/JRDC/2023/233** | 2,000/- +VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 22/11/2023 பி.ப. 2.00 மணி |
| 10 | நீர்மானி வாசித்தல், நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை தயாரித்தல் மற்றும் அவற்றை வாடிக்கையாளர்களுக்கு விநியோகித்தல் மற்றும் அது சார்ந்த வேலைகளுக்கு கேகாலை பிராந்தியத்திற்குரித்தான நீர் வழங்கல் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல **: RSC(SAB)/AGM(KEG)/O&M/ KEG.REG/SER/2023/90** | 6,000/- +VAT ** | ரூபா 75,000/- | வியாபாரப் பதிவு ஒழுங்குபடுத்தலின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் அல்லது இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தகைமை வாய்ந்த சமூக அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பிஒநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 22/11/2023 பி.ப. 2.00 மணி |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 11 | தலைமை அலுவலகம் - வர்த்தகப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல **: DGM/COMMERCIAL/VEHICLE HIRE/2023/01/R** | 4,000/-+VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 29/11/2023 மு.ப. 10.00 மணி |
**ரணில் விக்கிரமசேகர**
கொள்முதல் குழு தலைவர்
உள்ளூராட்சித் திணைக்களம்
தென் மாகாணம்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024
### சுற்றாடல் அமைச்சு

பத்தரமுல்ல, ரொபட் குணவர்தன மாவத்தை, இலக்கம் 416/சீ/1, 'சொபாதம் பியச' என்ற முகவரியிலமைந்துள்ள சுற்றாடல் அமைச்சிற்கு 2024ஆம் ஆண்டில் கீழ்க்காணப்படும் பண்டங்கள் மற்றும் சேவை வழங்கல்கள் மற்றும் வாகனங்களைப் புதுப்பித்தல்களிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பிரதான உருப்படி | உப உருப்படி |
|---|---|
| (அ) வழங்கல்கள் | 1. அனைத்து வகையான எழுதுகருவிகள் |
| | 2. அனைத்து வகையான அச்சு வேலைகள் |
| | 3. மின்சார உபகரணங்கள் |
| | 4. அலுவலக தளபாடங்கள் |
| | 5. கணனி, அச்சு இயந்திரங்கள், கணனி துணை உருப்புகள், டோனர்கள் மற்றும் காட்ரிஜ்கள் உட்பட அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் |
| | 6. சட்டைகள், (டீசேர்ட்) தொப்பி போன்ற ஆடைகளை அச்சிட்டு வழங்கல் |
| | 7. இரசாயனப் பதார்த்தங்கள் (கழுவும் திரவம் மற்றும் பதார்த்தங்கள், வளிச்சீராக்கித் தொகுதிகளிற்கான குளிர்சாதனப் பதார்த்தங்கள்) |
| (ஆ) சேவைகள் | 1. கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி அச்சு இயந்திரங்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்கள் (கணனி இயந்திரங்கள், நிழற்படப் பிரதியிடல் இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள, தொலைநகல் இயந்திரங்கள், ஸ்கேன் இயந்திரங்கள், பல்லூடக இயந்திரங்கள். |
| | 2. வீடியோ ஒளிப்பதிவு செய்தல், மற்றும் புகைப்படமெடுத்தல்/ அல்பம் தயாரித்தல்/ படங்களை சட்டகமிடுதல் |
| | 3. கிர.ஃபிக், இணையதளம் மற்றும் மென்பொருட்களை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்தல். |
| | 4. அலுவலக சுத்திகரிப்புச் சேவைகள் |
| | 5. பாதுகாப்புச் சேவைகள் |
| | 6. வைபவங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அவற்றிற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கல் |
| | 7. இறப்பர் முத்திரைகள் மற்றும் தினமுத்திரைகளை தயாரித்தல் |
| (இ) வாகனங்களின் புதுப்பித்தல்கள் | 1. வாகனங்களிற்கான டயர், டியூப், ரிம்டேப் வழங்கல் மற்றும் நிறுவுதல் சக்கரங்களை சீரமைத்தல் மற்றும் அவை சார்ந்த நடவடிக்கைகள் |
| | 2. வாகனங்களிற்கான பெற்றறிகளை வழங்கி பொருத்துதல் |
| | 3. அனைத்து வகையான புதுப்பித்தல்கள் (தொழில்நுட்பம், மின்சாரம் மற்றும் பூச்சு வேலைகள் உட்பட) |
| | 4. வாகனங்களின் வளிச்சீராக்கித் தொகுதிகளைப் புதுப்பித்தல் |
| | 5. வாகனங்களின் குஷன் வேலைகள்/ இருக்கைகளின் உறைகளை இடுதல் மற்றும் விரிப்புக்களை இடுதல் |
| | 6. வாகனங்களின் சேர்விஸ் வேலைகள் |
| | 7. வாகனங்களில் ஸ்டிக்கர் ஒட்டுதல் டின்டட் செய்தல் |

**வழங்குநர்களாகப் பதிவு செய்வதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பங்களுடனும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. வழங்குநரொருவராகப் பதிவு செய்து கொள்ளப்பட்டதன் பின்னர், இவ் அமைச்சினால் ஒப்படைக்கப்படும் சேவைகளை உரியவாறு மேற்கொள்வதற்குத் தவறும் பட்சத்தில், அவ்வாறான விடயங்கள் முன்வரும் ஆண்டுகளில் வழங்குநர்களைப் பதிவு செய்கையில் கவனத்திற் கொள்ளப்படும்.
3. பதிவு செய்யப்பட்டதன் பின்னர், இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளை மீறுபவர்கள், பதிவு செய்யப்பெற்ற வழங்குநர்களின் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.
4. முன்னைய ஆண்டுகளில் இவ் அமைச்சில் பதிவு செய்யப் பெற்றிருத்தல், 2024ஆம் ஆண்டிற்கான பதிவு எனக்கணிக்கப்படமாட்ட தென்பதுடன், 2024ஆம் ஆண்டிற்காகவும் மீண்டும் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
5. வழங்கல், சேவைகள் மற்றும் வாகனப் புதுப்பித்தல்கள் போன்ற பிரதான உருப்படிகளின் கீழுள்ள உப உருப்படிகளிற்காகத் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான உப உருப்படிகளிற்காக மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக ரூபா 1,500/- இற்கான தொகையொன்று செலுத்தப்படல் வேண்டும்.
6. 2023.11.08 முதல் 2023.11.29 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான அலுவலக நேரங்களில் பின்வரும் முகவரியிலமைந்துள்ள இவ் அமைச்சின் சிறாப்பர் பிரிவில் கட்டணத்சை செலுத்தி இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. விண்ணப்பத்தின் இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான உருப்படி, உப உருப்படி மற்றும் உப உருப்படிகள் தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுகையில் உரியவாறு கவனம் செலுத்தல் வெண்டும்.

   உ+ம்: **பிரதான உருப்படி** **உப உருப்படி** **உப உருப்படி தொடர்பான விபரம்**
   **(அ)** **01** **அனைத்து வகையான எழுது கருவிகள்**

8. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2023.11.30 அன்று பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, செயலாளர், சுற்றாடல் அமைச்சு, 'சொபாதம்பியஸ', இலக்கம் 416/சீ/1, ரொபட்குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது மேற்படி முகவரியிலமைந்துள்ள அமைச்சின் முதலாம் மாடியின் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் மேற் கொள்ளல் வேண்டும்.
9. கேள்விகளை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024' எனவும் அதற்குக் கீழ் பிரதான உருப்படி மற்றும் உப உருப்படி எனவும் குறிப்பிடுதல் வேண்டும்.

   உ+ம்: வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024
   வழங்கல் 05 - கணனி, அச்சு இயந்திரங்கள் மற்றும் கணனி துணை உறுப்புகள் உட்பட அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள்.

10. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், காரணமெதனையும் முன்வைக்காமல் அவற்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை அமைச்சின் செயலாளருக்கு உரித்தாகும்.
11. இது தொடர்பான மேலதிக விபரங்களை, கணக்காளர் (பெறுகை) இன் தொலைபேசி இல. 011-2034119 அல்லது அமைச்சின் கணக்குப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-2034120 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
12. இதற்கான விண்ணப்பப்படிவங்களை அமைச்சின் இணையதளத்தில் https://www.enu.gov.lk தரவிறக்கம் செய்து கொள்ளலாமென்பதுடன் இதற்கான பதிவுக் கட்டணத்தை அமைச்சின் சிறாப்பர் பிரிவில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு,**
**'சொபாதம் பியச'**
**இல. 416/சீ/1, ரொபட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## நெஸ்டமோல்ட் பாடசாலை மரதன் போட்டி காலியில்



நெஸ்லே நெஸ்டமோல்ட் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து நடத்தும் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியின் மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை (11) காலியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்து 300க்கும் அதிகமானவர்கள் அரை மரதன் (21 கி.மீ.) போட்டியில் பங்கேற்கவிருப்பதோடு கண்காட்சி மரதன் போட்டியில் 900 பேர் கலந்துகொள்ளவுள்ளனர். அரை மரதன் போட்டி காலை 6.30 க்கு காலி பஸ் தரிப்பிடத்தில் ஆரம்பமாகி தல்பே கடற்கரை பஸ் தரிப்பிடம் வரை சென்று அங்கிருந்து அந்தப் பாதை ஊடாக காலி சர்வதேச விளையாட்டு அரங்கில் நிறைவடையவுள்ளது. 5 கி.மீ. கொண்ட கண்காட்சி மரதன் போட்டி காலி பஸ் தரிப்பிடத்தில் ஆரம்பித்து காலி சர்வதேச விளையாட்டரங்கு வரை நடைபெறவுள்ளது.




'டைம் அவுட்' விவகாரம்:

# பங்களாதேஷ் அணியை கடுமையாக சாடிய மத்தியூஸ் வீடியோ ஆதாரமும் வெளியிட்டார்

சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக டைம் அவுட் முறையில் ஆட்டமிழந்த அஞ்சலோ மத்தியூஸ், பங்களாதேஷுக்கு எதிரான போட்டிக்கு பின்னரான ஊடக சந்திப்பில் தனது கோபத்தை வெளியிட்டதோடு, பங்களாதேஷின் செயல் 'வெட்ககரமானது' என்றார்.

மத்தியூஸின் சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்புக்கு மத்தியில் டெல்லியில் நேற்று முன்தினம் (06) நடந்த இந்தப் போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்து உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

தனது 15 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்வில் இத்தனை கீழ் நிலைக்குச் சென்ற அணி ஒன்றையும் வீரர் ஒருவரையும் கண்டதில்லை என்று மத்தியூஸ் குறிப்பிட்டார். மத்தியூஸ் துடுப்பெடுத்தாட மைதானத்திற்கு வந்து தயாரான நிலையிலேயே தலைக்கசவத்தை மாற்ற முயன்றார். அப்போதே பங்களாதேஷ் அணித் தலைவர் ஷகீப் அல் ஹசன் ஆட்டமிழப்புக் கோரினார்.

"நான் எந்தத் தவறும் செய்யவில்லை. இரண்டு நிமிடங்களில் நான் மைதானத்திற்கு வந்து தயாராகிவிட்டேன். அதன் பின்னரே உபகரணம் செயலிழந்திருந்தது. பொதுப் புத்தி எங்கே போனது என்று எனக்குத் தெரியவில்லை. ஷகீப் மற்றும் பங்களாதேஷ் இப்படி கிரிக்கெட் விளையாட விரும்பினால் வெட்ககரமானது. இப்படி கீழ் நிலைக்குச் செல்வது தவறானது" என்று மத்தியூஸ் தெரிவித்தார்.

ஐ.சி.சி. போட்டி விதியின்படி துடுப்பாட்ட வீரர் ஒருவர் ஆட்டமிழந்த பின்







அடுத்து வரும் துடுப்பாட்ட வீரர் இரண்டு நிமிடங்களுக்குள் துடுப்பெடுத்தாட தயாராக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

"எனது தலைக்கவசம் உடைந்த பின் இன்னும் ஐந்து விநாடிகள் இருந்தன. நான் மான்கடிங் அல்லது களத்தடுப்பாளரை இடையூறு செய்தது பற்றி பேசவில்லை. நான் பொதுப் புத்தி பற்றி பேசுகிறேன். இது உண்மையில் வெட்ககரமானது" என்றார்.

இந்த சம்பவம் குறித்து பங்களாதேஷ் அணித் தலைவர் ஷகீப் அல் ஹசனிடம் கேட்டபோது, தமக்கு அவரை 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட்டில் ஆடியது தொடக்கம் தெரியும் என்றும் போட்டி விதிக்கு அமையவே முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் வலியுறுத்தினார்.

எனினும் தனது சம்பவம் இரண்டு நிமிடங்களுக்குள்ளேயே இடம்பெற்றதாகவும் அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் மத்தியூஸ் தெரிவித்தார்.

இந்நிலையில் மத்தியூஸ் தனது கூற்றை நிரூபிக்கும் வீடியோ ஆதாரத்தை ட்விட்டர் சமூகதளத்தில் வெளியிட்டதோடு, நான்காவது நடுவரே தவறு என்று குறிப்பிட்டுள்ளார்.

"இங்கே 4ஆவது நடுவரே தவறு! (மாற்று) தலைக்கவசத்தை கொடுத்த பின்னரும் கூட எனக்கு இன்னும் 5 விநாடிகள் இருந்தன! இதனை 4ஆவது நடுவரால் தெளிவுபடுத்த முடியுமா? அதாவது, பாதுகாப்பு முக்கியம் என்பதால் தலைக்கவசம் இன்றி பந்துவீச்சாளரை எதிர்கொள்ள முடியாது என்ற அர்த்தத்திலேயே நான் கூறுகிறேன்" என்று மத்தியூஸ் சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலுக்கு பதிலளிக்கும் வகையில் தனது ட்விட்டர் பதிவை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வீடியோ ஆதாரத்தில் சதீர சமரவிக்ரம ஆட்டமிழப்பது மற்றும் மத்தியூஸ் மாற்று தலைக்கவசத்தை அணியும் காட்சிகள் உள்ளதோடு அந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் இடையிலான கால இடைவெளி ஒரு நிமிடம் மற்றும் 55 விநாடிகளாகவே பதிவாகியுள்ளது.

## கை கொடுக்க மறுப்பு

பங்களாதேஷ் வெற்றி ஓட்டத்தை பெற்ற விரைவில் இலங்கை வீரர்கள் நடுவருக்கு மாத்திரம் கைலாகு கொடுத்து விட்டு மைதானத்தை விட்டு வெளியேறினர். அவர்கள் பங்களாதேஷ் வீரர்களுக்கு கைலாகு கொடுக்க மறுத்தனர்.

மத்தியூஸின் டைம் அவுட் ஆட்டமிழப்புக்குப் பின்னர் இரு அணி வீரர்கள் இடையிலும் மைதானத்தில் சில சந்தர்ப்பங்களில் முறுகல் ஏற்பட்டதை காண முடிந்தது.

குறிப்பாக ஷகீப் துடுப்பெடுத்தாட வந்தபோது அவரை கோபத்தோடு வரவேற்ற மத்தியூஸ் அவரை ஆட்டமிழக்கச் செய்த பின் மணிக்கட்டை காண்பித்து நேரம் முடிந்துவிட்டது என்று செய்கை செய்தார்.



போட்டி முடிந்தபோதும் இந்த நிலை நீடித்தது. போட்டி முடிவுக்குப் பின் வழக்கமாக இரு அணிகளும் வரிசையில் நின்று கைலாகு கொடுத்துக்கொள்வார்கள் என்றபோதும் இந்தப் போட்டியில் அது நிகழவில்லை. இரு அணிகளின் பயிற்சியாளர்கள் மற்றும் உதவியாளர்களே பரஸ்பரம் கைலாகு கொடுத்தனர்.

## லெஜண்ட் 96 வெற்றி




**பெரியநீலாவணை விசேட, கல்முனை மத்திய தினகரன் நிருபர்கள்**

கல்முனை சாஹிராக் கல்லூரியில் கல்வி கற்ற 46 வயதுக்கு மேற்பட்ட பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட 'ஸஹ்றியன் லெஜென்ட் பிரிமியர் லீக்' கிரிக்கெட் தொடரில் சம்பியன் கிண்ணத்தை லெஜண்ட் 96 பவர் பிளேயர்ஸ் அணி கைப்பற்றியது.

பவர் பிளேயர்ஸ் சஹ்ரியன் 96 அணியின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிறன்று (5) நடந்த இறுதிப் போட்டியில் லெஜண்ட் 90 அணியையே லெஜண்ட் 96 அணி வீழ்த்தியது. இந்தத் தொடரில் மொத்தம் 6 அணிகள் பங்கேற்றன.

## சர்வதேச செய்திகள்

# காசா போருக்கு ஒரு மாதம் எட்டிய நிலையில் இஸ்ரேல் தொடர்ந்தும் இடைவிடாது தாக்குதல்

## காசாவை அப்பாஸிடம் கொடுக்க பேச்சு

காசா மற்றும் இஸ்ரேல் போர் வெடித்து நேற்றுடன் ஒரு மாதம் எட்டிய நிலையில் இஸ்ரேலின் வான் மற்றும் தரைவழி தாக்குதல்கள் இடைவிடாது நீடித்து வருவதோடு போர் நிறுத்தத்திற்கான அழைப்பையும் இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு தொடர்ந்து மறுத்து வருகிறார்.

காசாவில் உயிரிழப்பு 10,000ஐ தாண்டி இருப்பதோடு காசா நகரை சுற்றிவளைத்ததாக குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பின் வளாகம் ஒன்றையும் கைப்பற்றியதாக தெரிவித்துள்ளது. எனினும் நிலத்தடி சுரங்கப்பதைகளில் இருந்து பலஸ்தீன போராளிகள் தொடர்ந்து இஸ்ரேலிய படைகளுடன் சண்டையிட்டு வருகின்றனர்.

தெற்கு காசா நகரங்களான கான் யூனிஸ் மற்றும் ரபா மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 23 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரித்துள்ளது.

வடக்கு காசாவிலும் தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்றபோதும் அங்குள்ள மக்கள் தெற்கை நோக்கி சலாஹ் அல் தீன் பாதை வழியாக பயணிக்க இஸ்ரேல் இராணுவம் நேற்று நான்கு மணி நேரம் அவகாசம் வழங்கி இருந்தது.

காசாவில் இதுவரை 12,000க்கும் அதிமான இலக்குகள் மீது வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடத்தி இருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது. தரைவழி துருப்புகளை அனுப்பியிருக்கும் இஸ்ரேல் காசா பகுதியை இரண்டாக பிரித்திருப்பதாகவும் காசா நகரை சுற்றிவளைத்ததாகவும் கூறியது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி 1400 பேரை கொன்று 240 பேரை பணயக்கைதிகளாக கடத்திச் சென்றது தொடக்கம் காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

போர் நிறுத்தத்திற்கான அழைப்பு அதிகரித்தபோதும் அதற்கான சாதகமான நிலைப்பாடு வெளியாகவில்லை. போர் நிறுத்தத்திற்கு முன்னர் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று இஸ்ரேல் கூறும் அதே நேரம் காசா தாக்குதலுக்கு இலக்காகும் நிலையில் அவர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள் என்று ஹமாஸ் கூறுகிறது.

போர் நிறுத்தம் இஸ்ரேலின் போர் நடவடிக்கையை சீர்குலைத்துவிடும் என்றும் அமெரிக்கா ஆதரிக்கும் மனிதாபிமான காரணத்திற்கான போர் நிறுத்தம், சூழலுக்கேற்ப முன்னெடுக்கப்படும் என்றும் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

"மூலோபாய ரீதியில் அங்கும் இங்கும் போர் நிறுத்தங்களை நாம் முன்னெடுப்பதோடு நாம் இதனை முன்னரும் செய்துள்ளோம். மனிதாபிமான உதவிகள் வருவதற்கு அல்லது எமது பணயக் கைதிகள், தனிப்பட்ட பணயக்கைதிகள் வெளியேறுவதற்கான சூழலை நாம் சரிபார்க்கிறோம்" என்று ஏ.பி.சி நியூஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது



தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த திங்கட்கிழமை நெதன்யாகுவுடன் தொலைபேசியில் ஆலோசித்துள்ளார். இஸ்ரேலுக்கு நாம் ஆதரவு அளிக்கும் அதே நேரம் பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலைப் போன்றே போர் நிறுத்தம் ஒன்றை ஹமாஸ் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் என்று அமெரிக்காவும் அச்சத்தை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்த ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், காசா குழந்தைகளின் கல்லறையாக மாறி வருவதாக தெரிவித்தார்.

"இஸ்ரேலிய படை தரைவழி நடவடிக்கையை மேற்கொள்வதோடு பொதுமக்கள், மருத்துவமனைகள், அகதி முகாம்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் மற்றும் முகாம்கள் உட்பட ஐ.நா நிலைகள் மீதும் தாக்குகிறது. யாரும் பாதுகாப்பாக இல்லை" என்று குட்டரஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"அதேநேரம் ஹமாஸ் மற்றும் ஏனைய போராட்ட அமைப்புகள் பொதுமக்களை மனிதக் கேடயமாக பயன்படுத்துவதோடு இஸ்ரேலை நோக்கி ரொக்கெட் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது" என்றும் அவர் கூறினார்.

30 ஆண்டுகளில் வேறு எங்கும் நடக்காத அளவுக்கு இந்த 4 வாரத்தில் அதிகமான செய்தியாளர்களும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியாளர்களும் பலியாகிவிட்டனர் என்றும் அவர் கூறினார்.

காசாவில் இஸ்ரேலினால் 48 செய்தியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனைகளால் காயமடைந்தவர்களை கையாள முடியாதிருப்பதோடு உதவி விநியோகங்கள் கிட்டத்தட்ட முடியும் நிலையை எட்டியிருக்கும் சூழலில் உணவு மற்றும் சுத்தமான நீர் தீர்ந்து வருவதாகவும் சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன.

வடக்கு காசாவில் தொடர்ந்தும் 350,000 பொதுமக்கள் இருப்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கும் நிலையில் அங்கு வீடு வீடாக இடம்பெறும் கடுமையான மோதல் தொடர்பில் இராணுவ ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். காசாவில் இருந்து இஸ்ரேல் 2005 ஆம் ஆண்டு வாபஸ் பெற்றதோடு 2014 ஆம் ஆண்டு அது கடைசியாக தரை வழி தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தது.



கடந்த 15 ஆண்டு காலத்தில் ஹமாஸ் தரைக்குக் கீழும், தரை மட்டத்திலும், தரைக்கு மேலும் பாதுகாப்பை பலப்படுத்த அவகாசம் இருந்திருப்பதாக வொஷிங்டனைச் சேர்ந்த சிந்தை அமைப்பின் மைக்கல் நைட்ஸ் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அந்த அமைப்பின் தற்பாதுகாப்பில் கண்ணிவெடிகள், மேம்படுத்தப்பட்ட வெடிபொருட்கள், கவசவாகன எதிர்ப்பு கண்ணிவெடிகள் மற்றும் கட்டடங்களை சிதைக்கக் கூடிய பொறிகளும் இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஹமாஸிடம் நூற்றுக்கணக்கான கிலோமீற்றர்கள் வரை செல்லக் கூடிய சுரங்கப்பாதைகள் இருப்பதோடு, கடத்தப்பட்டிருக்கும் பணயக்கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இஸ்ரேலின் போர் நடவடிக்கை சிக்கலை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மத்திய கிழக்கு பயணத்தின் பின் ஜி7 வெளியுறவு அமைச்சர்களுடனான சந்திப்புக்காக ஜப்பான் விஜயம் மேற்கொண்டுள்ளார். அந்த மாநாட்டில் காசா விவகாரம் தொடர்பில் பொதுவான நிலைப்பாடு ஒன்றை பெற அவர் முயல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போர் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் போர் முடிவில் காசாவை யார் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பிலும் பிளிங்கன் பேசியுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்ற பிளிங்கன், பலஸ்தீன அதிகாரசபையின் கீழான ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்தபோது காசாவின் கட்டுப்பாட்டை ஏற்கும்படி கேட்டுள்ளார்.

எனினும் இஸ்ரேல் – பலஸ்தீன பிரச்சினைக்கு விரிவான தீர்வொன்று எட்டப்பட்டாலேயே பலஸ்தீன அதிகாரசபை காசாவில் அதிகாரத்தை பெறும் என்று அப்பாஸ் தெரிவித்துள்ளார். எனினும் காசாவில் பொம்மை அரசாங்கத்தை ஏற்கமாட்டோம் என்று ஹமாஸ் அமைப்பு கூறியுள்ளது. உலகில் எந்த சக்தியாலும் தம்மை நிர்மூலமாக்க முடியாது என்று லெபனானில் உள்ள ஹமாஸ் மூத்த அதிகாரி ஒசாமா ஹம்தான் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையும் திங்களன்று மூடிய அறையில் கூடியது. இந்தப் போர் தொடர்பில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் நான்கு முயற்சிகள் தோல்வியடைந்த நிலையிலேயே 15 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபை மீண்டும் கூடியுள்ளது.

இதேவேளை தென்னாபிரிக்காவும் இஸ்ரேலுக்கான தனது தூதுவரை திரும்ப அழைத்துள்ளது. காசாவில் உள்ள பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் கூட்டுத் தண்டனையை மேற்கொள்வதாக அது தெரிவித்துள்ளது.

இதன்படி போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேலுக்கான தூதுவர்களை திரும்ப அழைத்துக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளது. தவிர, பொலிவியா இஸ்ரேலுடனான உறவை துண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 8ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# சீத்தாவக்க பிரதேச சபை - ஹங்வெல்ல

# கேள்வி அறிவித்தல் மற்றும் அட்டவணை

2024-01-01ம் திகதி முதல் 2024-12-31ம் திகதி வரை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சபைக்குரித்தான ஆதனங்களை வருடாந்த குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

தமது அடையாள அட்டையைச் சமர்ப்பித்து அறிவித்தலின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இந்த அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் கேள்விப் படிவங்களில் மட்டுமே கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாக மட்டுமே செலுத்துதல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். எதிர்காலத்தில் ஏதாவது வரியொன்று அரசாங்கத்தால் விதிக்கப்பட்டால் கேள்விப் படிவக் கட்டணத்திற்கு அந்த வரியைச் செலுத்துவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

2023-11-22ம் திகதி பி.ப. 03.00 மணி வரை சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்பதுடன் 2023-11-23ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''தவிசாளர், சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல'' எனும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். 2023-11-23ம் திகதி சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் இச்சந்தர்ப்பத்தில் சமுகம்தந்து கலந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் | - | 2023-11-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை |
| கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் | - | 2023-11-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை |
| கேள்விப் படிவங்கள் திறத்தல் | - | 2023-11-24ம் திகதி கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்தவுடன் |

தெரிவு செய்யப்படும் கேள்விதாரருக்கு கேள்வித் தொகையை ஒரே தடவையில் செலுத்தலாம் என்பதுடன் அவ்வாறல்லாவிடின் 06 தவணைக் கட்டணத்தை பிணையாக சபையில் வைப்புச் செய்து 2023-11-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும். கேள்வித் தொகையை தவணை முறையில் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தலாம்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதன் பின் முதலாவது கோரிக்கையாளர் அந்த கேள்வியை நிராகரித்தால் கேள்விப் பிணைத் தொகை சபைக்குரித்தாக்கப்படும் என்பதுடன் கேள்விகளைச் சமர்ப்பித்துள்ள அனைத்து கோரிக்கையாளர்களிடம் வரிசைக்கிரமமாக முதலாம் கோரிக்கையாளரின் கேள்வித் தொகைக்கு கேள்வியை ஏற்றுக்கொள்ளும் இணக்கப்பாட்டை விசாரித்தறிந்து அவ்வாறு இணங்காவிடின் அந்த ஆதனத்தை மீண்டும் கேள்வியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கேள்விப் படிவம் நகல்பிரதியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளும் ஆதனத்தின் பெயரைக் குறிப்பிட்டு கேள்விப் படிவத்தை தாங்கிய உறை முத்திரையிடப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை ஹங்வெல்ல சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் அறிந்துகொள்ளலாம். கேள்விகள் தொடர்பில் பிரதேச சபையின் கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

அனைத்து குத்தகைதாரராலும் தம்மால் கோரப்படும் தொகைக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட வெட் வரி மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் ஏனைய வரிகளைச் செலுத்துவதற்கு இணங்குதல் வேண்டும்.

**கே. ஏ. சந்தன பத்மசிரி,**
**செயலாளர் மற்றும் சீத்தாவக்க பிரதேச சபையின்**
**அதிகாரம் வாய்ந்த வேலைகளை நிறைவேற்றும்**
**அதிகாரி,**
**சீத்தாவக்க பிரதேச சபை,**
**ஹங்வெல்ல.**

**2023-11-03ஆம் திகதி**
**பிரதான அலுவலகத்தில்.**

| தொ. இல. | தொழில் முயற்சியின் பெயர் | கேள்விப் பிணைப் பணம் ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | குறைந்த பட்ச கேள்வித் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கஹஹேன வாரச் சந்தை (செவ்வாய்க்கிழமை)<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றை பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றின் விலை ரூபா. 100.00) | 30,000.00 | 750.00 | 270,000.00 |
| 02 | ஹங்வெல்ல வாரச் சந்தை (திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகள்) (நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றை பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றின் விலை ரூபா. 300.00) | 250,000.00 | 1,500.00 | 4,500,000.00 |
| 03 | ஹங்வெல்ல 4ம் இலக்க பன்றியிறைச்சிக் கடை<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்பதற்கு முடியாது) | 200,000.00 | 1,500.00 | 1,843,000.00 |
| 04 | ஹங்வெல்ல 1ம் 2ம் இலக்க மாட்டிறைச்சிக் கடைகள்<br>(நிபந்தனைகள்: கேள்விதாரரால் இறைச்சி பெற்றுக்கொள்ளப்படும் கொலைக்களம் அனுமதிக்கப்பட்ட கொலைக்களம் என்பதற்கான ஆவணச் சான்றிதழை கேள்வி விண்ணப்பம் மீளக் கையளிக்கப்படும் வேளையில் சமாப்பித்தல் வேண்டும். குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும்) | 250,000.00 | 1,500.00 | 3,220,000.00 |
| 05 | ஹங்வெல்ல 3ம் இலக்க ஆட்டிறைச்சி, கோழியிறைச்சிக் கடை. (நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும்.) | 50,000.00 | 1,500.00 | 650,000.00 |
| 06 | பாதுக்க வாரச் சந்தை (செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகள்) (நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றை பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றின் விலை 300.00 மீன் கூடாரமொன்றின் விலை 800.00) | 250,000.00 | 1,500.00 | 3,600.000.00 |
| 07 | பாதுக்க ஆட்டிறைச்சி, கோழியிறைச்சிக் கடைகள் - இடம் - பாதுக்க புதிய சந்தையின் மீன் கடை 4ம், 5ம் இலக்க இடங்கள்<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்பதற்கு முடியாது) | 100,000.00 | 1,500.00 | 764,000.00 |
| 08 | பாதுக்க பன்றியிறைச்சிக் கடை<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்பதற்கு முடியாது)) | 100,000.00 | 1,500.00 | 825,000.00 |
| 09 | பாதுக்க விளையாட்டரங்கின் 06 தென்னை மரங்களின் தேங்காய் விளைச்சல் | 500.00 | 100.00 | 4,500.00 |
| 10 | பாதுக்க புதிய சந்தையின் 01ஆம் இலக்க மீன் கடை<br>(நிபந்தனைகள்: மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு பேணுதல் வேண்டும்.) | 15,000.00 | 500.00 | 7,000.00 |
| 11 | பாதுக்க மாட்டிறைச்சிக்கடை இடம் - பாதுக்க புதிய சந்தையின் மீன் கடை 2ம், 3ம் இலக்க இடங்கள்<br>(நிபந்தனைகள்: கேள்விதாரரால் இறைச்சி பெற்றுக்கொள்ளப்படும் கொலைக்களம் அனுமதிக்கப்பட்ட கொலைக்களம் என்பதற்கான ஆவணச் சான்றிதழை கேள்வி விண்ணப்பம் மீளக் கையளிக்கப்படும் வேளையில் சமர்ப்பித்தல் வேண்டும். குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும்) | 150,000.00 | 1,500.00 | 4,954,000.00 |
| 12 | கொஸ்கம வாரச் சந்தை (செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்)<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. வாரச் சந்தையின் முன்புறத்தில் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் வேண்டும். குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றை பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றில் விலை 200.00 ரூபா) | 250,000.00 | 1,500.00 | 3,000,000.00 |
| 13 | கொஸ்கம வாரச்சந்தை பன்றியிறைச்சிக் கடை (செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்)<br>இடம் - வாரச்சந்தை மீன் கடை 42ஆம் இலக்க இடம்<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்கக் கூடாது) | 20,000.00 | 750.00 | 48,000.00 |
| 14 | அருக்வத்த பொது மயானத்தின் விளைச்சல் | 500.00 | 100.00 | 4,500.00 |
| 15 | பாதுக்க மக்கள் விளையாட்டரங்கின் 20'x12' அறையை குத்தகைக்கு வழங்குதல் | 20,000.00 | 750.00 | 356,000.00 |
| 16 | பாதுக்க பழைய சந்தைக் கட்டிடத்தொகுதியின் 03ஆம் இலக்க கடை அறையை குத்தகைக்கு வழங்குதல்.<br>(நிபந்தனைகள்: கடை அறையினுள் எவ்வகையான இறைச்சி அல்லது மீன் விற்பனை செய்ய முடியாது. குறித்த ஆதனத்தினுள் சட்டவிரோத வியாபாரத்தை நடாத்திச் செல்லல் அல்லது சட்ட விரோத நபர்களுக்கு அடைக்களம் கொடுக்கக் கூடாது) | 10,000.00 | 750.00 | 234,000.00 |
| 17 | கஹஹேன உள்நாட்டு உணவக கடை அறையை குத்தகைக்கு வழங்குதல்.<br>(நிபந்தனைகள்: கடை அறையினுள் எவ்வகையான இறைச்சி அல்லது மீன் விற்பனை செய்ய முடியாது. குறித்த ஆதனத்தினுள் சட்டவிரோத வியாபாரத்தை நடாத்திச் செல்லல் அல்லது சட்ட விரோத நபர்களுக்கு அடைக்களம் கொடுக்கக் கூடாது) | 500.00 | 250.00 | 13500.00 |
| 18 | பாதுக்க பொது மலசலகூடம்<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் ஒரு நாளைக்கு மூன்று முறை குறித்த இடத்தை சுத்திகரித்தல் வேண்டும். மலசலக் கூடத்தை பயன்படுத்துபவர்களிடமிருந்து ஒரு தடவைக்கு அதிகபட்சமாக 20.00 ரூபா அறிவிடுதல் வேண்டும் என்பதுடன் மு.ப. 05.00 மணி முதல் பி.ப. 10.00 மணி வரை திறக்கப்பட்டிருத்தல் வேண்டும்.) | 50,000.00 | 750.00 | 500,000.00 |

## பொது அறிவித்தல்



மொறட்டுவ, லுணாவ, உயண வீதி, 06 ஆம் ஒழுங்கை, 05 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 563272902V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடையவருமாகிய திரு. கிளைவ் ஷாந்த ஜெராட் டேவிட் என்பவர் 2023.11.01 ஆம் திகதியிலிருந்து திருமதி. ஆர்.எஸ். ரூபசிங்ஹ உக்கஸ்கருவோ (பிரைவட்) லிமிட்டட் இன் வியாபாரம் மற்றும் தாபனத்துடன் இணைந்திருக்கவில்லையென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதுமுதற்கொண்டு திரு. கிளைவ் ஷாந்த ஜெராட் டேவிட் என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கையாளுதல்கள் மற்றும்/ அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு எமது நிறுவனமானது பொறுப்பாகவோ அல்லது கடப்பாட்டையுடையதாகவோ இருக்க மாட்டாதென தயவுசெய்து அறிந்து கொள்ளவும்.

**திருமதி. ஆர்.எஸ். ரூபசிங்ஹ உக்கஸ்கருவோ (பிரைவட்) லிமிட்டட்**
**இல. 42, புகையிரத நிலைய வீதி, மொறட்டுவ.**
**தொலைபேசி: 0714277228**


## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 02/08/2023 | 01/09/2023 | 24 & 28 /11/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஒரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388


## 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல -
**ARA/LAD5/ACQUI/DADU/CHEK POINT**
காணி இல -
**4-3/4/2017/LO/143**

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ் விபரிக்கப்பட்ட காணியை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணி தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள விசாரணைகள் தொடர்பாக 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்று இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2348/41 ஆம் இலக்க 2023.09.08 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது

**அட்டவணை**

மாகாணம் : வடமேல்
மாவட்டம் : புத்தளம்
பிரதேச செயலாளர் பிரிவு : ஆராய்ச்சிக்கட்டு
கிராம உத்தியோகத்தர் பிரிவு : 574 வீரகுமந்தளுவ
கிராமம் : சித்தமடம்
காணியின் பெயர் : மாட்டின்வத்த
வரைபட இலக்கம் : க.வ.இல 410299 தொகுதி இல 10
துண்டு இலக்கம் : 01,02,03

ஈ.ஏ.டீ.எம். அத்துகோரல
பிரதேச செயலாளர்
ஆராய்ச்சிக்கட்டு

2023.10.30
பிரதேச செயலகம்
ஆராய்ச்சிக்கட்டு

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 7 வது பிரிவின் கீழ் அறிவித்தல்

**தொடர்பு இலக்கம்: கடு/காணி/01/143/WS**

பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணிகள் பொது பணியொன்றின் நிமித்தம் அரசாங்கத்திற்கு சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம்: 2340/18 மற்றும் 2023/07/11 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் III பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

1. மாகாணம் : மேல்
2. மாவட்டம் : கொழும்பு
3. பிரதேச செயலகம் : கடுவலை
4. கிராமத்தின் பெயர் : ஹோகந்தர வடக்கு
5. காணியின் பெயர் : நாகஹவத்த அல்லது தபுகஹவத்த
6. ஆரம்ப திட்டவரை இலக்கம் : ஆ.தி.கொ.9999
7. துண்டுகளின் எண்ணிக்கை : 01

**பிரதேச செயலாளர்**
**கடுவலை**
**2023.10.25**

# தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

## சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரலுக்கான அழைப்பு

**01 – 02 – 2024 முதல் 31 – 01 – 2025 வரையான காலகட்டத்திற்கான வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதிக்கான மீள்காப்புறுதி காப்பீட்டின் பெறுகை**

NITF/PRO/MPC/2023/01

1. தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, (இனிமேல் MPC என அழைக்கப்படுகிறது) தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் சார்பாக (இனி NITF என அழைக்கப்படுகிறது) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு 01/02/2024 முதல் 31/01/2025 வரையிலான காலகட்டத்திற்கு வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதிக்கான மீள்காப்புறுதி காப்பீட்டுப் பெறுகைக்காக தகுதியான சர்வதேச மறுகாப்பீட்டாளர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தகுதியான தரகர்களிடமிருந்து விலைமனுக்களை அழைக்கின்றது.
2. NITF 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி சட்டத்தால் நிறுவப்பட்டது. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் கீழ் வரும் செயற்பாடுகள் தேசிய காப்புறுதி நிதியத்தினால் உள்வாங்கப்பட்டுள்ளன. 2008 மார்ச் 25ஆம் திகதிய 1542/11ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பொதுக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத இடர்களுக்கான காப்புறுதியைப் பெறுபவர்களுக்கு வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்பீட்டுத் தொகைகளை NITF வழங்குகின்றது. மேலும் NITF 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க இலங்கையின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தரப்பினர், தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவு மூலம் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணமான 35,000.00 இலங்கை ரூபா அல்லது 110 USD செலுத்திய பின், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தியதன் பின் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், 4வது மாடி, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 2 எனும் முகவரியிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை 09:00 மணித்தியாலம் முதல் 15:00 மணித்தியாலம் வரை வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை NITF (www.nitf.lk), நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு (www.treasury.gov.lk), அல்லது வெளிநாட்டு விவகார அமைச்சு (www.mfa.gov.lk) என்பவற்றின் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுக்களுடன் மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்திய வங்கி வரைவைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | இல. ரூபாவுக்கான வங்கிக் கணக்கு | USD க்கான வங்கிக் கணக்கு |
|---|---|---|
| வங்கியின் பெயர் | மக்கள் வங்கி | மக்கள் வங்கி |
| கிளை | யூனியன் பிளேஸ் | குயீன்ஸ் கிளை |
| கணக்கின் பெயர் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் |
| கணக்கிலக்கம் | 014-100127679733 | 033-4-022-3-2467951 |
| Swift Code | PSBKLKLX | PSBKLKLX |

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''01/02/2024 முதல் 31/01/2025 வரையிலான காலகட்டத்திற்கு வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதிக்கான மீள்காப்புறுதி காப்பீட்டுப் பெறுகை - **NITF/PRO/MPC/2023/01**'' எனக் குறிப்பிட்டு 2023 டிசம்பர் 21ஆம் திகதி 15:00 மணித்தியாலம் இலங்கையின் நிலையான நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கூரியர் சேவை மூலம் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
5. தகுதியான சர்வதேச மீள்காப்பீட்டாளர்கள், சர்வதேச மீள்காப்பீட்டுத் தரகர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் (IRCSL) பதிவு செய்யப்பட்ட தரகர்கள் அல்லது உத்தியோகபூர்வ அங்கீகாரக் கடிதத்துடனான அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் சமுகத்துடன் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 4ஆம் தளத்திலுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை அறையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். கூட்டத்தில் விலைமனுதாரர்களின் பெயர்கள் மற்றும் விலைகளை NITF அறிவிக்கும்.
6. கடித மொழிமூலம் ஆங்கிலமாகும். எவ்வாறாயினும் மேற்படி ஆவணங்கள் ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஏதேனும் மொழியில் இருந்தால் அத்தகைய ஆவணங்களுடன் சான்றளிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பும் இருத்தல் வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு இறுதியாகக் கருதப்படும் என்பதுடன் வழங்கப்பட்ட தகவல்களை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும்.
7. அனைத்து விலைமனுதாரர்களும் (சர்வதேச மீள்காப்புறுதியாளர்கள் / தரகர்கள் இலங்கையின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ளவர்கள்) இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வணிக வங்கியிலிருந்தோ அல்லது வேறொரு நாட்டில் உள்ள வங்கியிலிருந்தோ பெறப்பட்ட விலைக்கோரல் பிணை முறியை வழங்குதல் வேண்டும். ஆனால் இலங்கையில் செயல்படும் வர்த்தக வங்கியால் உறுதி செய்யப்பட்ட உத்தரவாதமாக இருக்க வேண்டும். விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி 1,200,000.00 ரூபா அல்லது 3,670 USD தொகையை விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் 2024 மே 05 ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை, கொழும்பு 02, இல. 95, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு முகவரியிடப்பட்டு மேற்குறிப்பிடப்பட்ட NITF வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் நபர்களைத் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய நபர் : முகாமையாளர் (மீள்காப்புறுதி மற்றும் SRCC)
நேரடி தொலைபேசி : +94 112026669
தொலைநகல் : +94 114700988
மின்னஞ்சல் : pro_SRCC@nitf.lk

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**
**இலங்கை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## பொது அறிவிப்பு

### டைனாகொம் என்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட்டின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) (**''ஆணைக்குழு''**) தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் நிறமாலையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடரப் ான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க **ட்ரங்கிங் கையடக் தொலைபேசி தொலைத்தொடரபு சேவையை** வழங்குவதறகு தொலைத்தொடர்பு முறைமையொன்றைச் செயற்படுத்துவதறக் சட்டத்தின் 17(2) மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் லிமிடட் விண்ணப்பித்துள்ளது.

தொலைத்தொடரப்புகள் சட்டத்தின் 17 (2) ஆம் கொள்வதறக் டைனாகொம் என்ஜினியரிங் பிரிவின் கீழ் (பிரைவட்) எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுபப் க்களின் கருதப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடியஎஅவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க மேலொமொரு ஐந்து வருட காலப் பகுதிக்காக **டைனாகொம் என்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட்டிற்கு** வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதறகு ஆணைக்குழு கருதுகின்றது என்பது சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**டைனாகொம் என்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட்டிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை **2023.12.07** ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இதனால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணைய தளமான https://www.trc.gov.lk இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி : 011 – 2689345 பெக்ஸ் : 011 – 2689341 மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk**

# உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு

## மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி

### 2024ஆம் வருடத்திற்கான வழங்கல்கள், சேவைகள், ஒப்பந்த வேலைக்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

இரத்தினபுரி மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கான வேலை, வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 2024ஆம் வருடத்தில் பதிவு செய்துகொள்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் / உள்நாட்டு முகவர்கள் / வழங்குநர்கள் / சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வேலை இல.** **உருப்படி விபரங்கள்**

01. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்
02. பெருந்தெருக்கள், பாலம், மதகு நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள்
   - மேற்கூறப்பட்ட 01 மற்றும் 02 உருப்படிக்காக (CIDA) அல்லது மாகாணப் பதிவு கட்டாயமாகும் என்பதுடன் அதற்கு இயைபான செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. வாவி கால்வாய் மற்றும் விவசாயக் கிணறுகளை நிர்மாணித்தல் மற்றும் திருத்தவேலைகள்
04. சகல வகையான வேல்டிங் வேலைகள் மற்றும் அலுமினிய வேலைகள்
05. கட்டிட மின் முறைமை வேலைகளை மேம்படுத்துதல் மற்றும் திருத்தவேலைகள்
06. நீர்க் குழாய் முறைமைகளை மேம்படுத்துதல் மற்றும் திருத்தவேலைகள்
07. சகல வகையான தச்சு வேலைகள்
08. சகல வகையான மின்னியல் வேலைகள்

**வழங்கல் (பொருட்கள்)**

**காகிதாதிகள்**

09. சகல வகையான காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள்
10. கணனி காகிதாதிகள் (கணனி காகிதங்கள், ரிபன், டிஸ்கட் மற்றும் ஏனையவை)

**அலுவலக உபகரணங்கள்**

11. சகல வகையான அலுவலக உபகரணங்கள்
12. இறப்பர் முத்திரை, திகதி முத்திரை, புளொக் மற்றும் அச்சு வேலைகள்
13. கணனி இயந்திரம், தட்டச்சுப்பொறி, கணித்தல் பொறி இதற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் வலையமைப்பிடல் துணைப்பாகங்கள்
14. உலோகம், மரம் மற்றும் பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகள்

**வாகன உதிரிப்பாகங்கள்**

15. சகல வகையான மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
16. டயர், டியூப் மற்றும் பெட்டறி

**கட்டிடப் பொருட்கள்**

17. சகல வகையான கட்டிடப் பொருட்கள் (மண், கல், மணல்)
18. நீர்க்குழாய் மற்றும் நீர் வழங்கல் உபகரணங்கள்
19. சகல வகையான மின்சார உபகரணங்கள்
20. வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் அதற்கான உதிரிப்பாகங்கள்

**சேவைகள்**

